கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகள்

(பகுதி 2)

அன்பு, ஜெபம்,
மன்னிப்பு

The Values of Christ (Part - 2)
Booklet - 17
Tamil

© IBL
2003

Cover Credit : Cynthia Kingston
Printed by :

For additional booklets write to :

India Bible Literature
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகள் (பகுதி 2)

புத்தகம் - 17

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு,
கீழ்ப்பாக்கம்
சென்னை - 600 010.

அத்தியாயம் – 1

சத்துருக்களை நேசித்தல்

செப்டம்பர் 11, 2001 என்ற தேதி அமெரிக்காவில் அதன் கௌரவத்துக்குப் பங்கம் விளைத்த ஒரு நாளாக என்றைக்கும் நிற்கும். அந்த நாளின் சம்பவங்கள் அமெரிக்காவையும், உலகத்தையும் அதிரச் செய்ததற்குக் காரணம், அன்றைக்கு ஏற்பட்ட பயங்கரமான உயிர்ச் சேதம் மட்டுமல்ல, கோடிக்கணக்கான மக்களின் மதிப்புமிக்க தன்மைகள் அன்றைக்குத் தாக்கப்பட்டன. இயேசு மதிப்புமிக்க தன்மைகளைப் பற்றி அதிகமாக போதித்தார். நம்முடைய மதிப்புமிக்க தன்மைகள் நம்முடைய இருதயம் எங்கே இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன என்று அவர் போதித்தார்; நம்முடைய இருதயங்கள் ''உலகத்திலுள்ள பொக்கிஷங் களின் மீது'' இராமல், ''பரலோகத்திலுள்ள பொக்கிஷங்களின்மீது'' இருக்க வேண்டுமென்ற உண்மையை அவர் வலியுறுத்தினார். அவர் இதற்கு இரண்டு அருமையான காரணங்களை அளித்தார்: உலகப் பிரகாரமான பொக்கிஷங்கள் தங்களுடைய மதிப்பளவில் குறைந்து கொண்டிருக்கின்றன; அவை நம்மிடமிருந்து எடுத்துக் கொள்ளப் படுகின்றன; நாம், மதிப்பளவில் குறையாததும், நம்மிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படாததுமான பரலோகத்தின் பொக்கிஷங்களை உடையவர் களாக இருக்க வேண்டும் (மத்தேயு 6:19-34).

சொற்பொருள் அகராதியின்படி ஒரு மதிப்புமிக்க தன்மை என்பது, ''ஒரு குறிப்பிட்ட காரியத்தின் தன்மையை அது ஏறக்குறைய முக்கியமானதாகவும், பயனுள்ளதாகவும், லாபகரமானதாகவும், இதன் கரணமாக, ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது என்று நாம் உறுதி செய்வதாகும்.'' கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகளைப் பற்றிய இந்தத் தொடரின் முதலாம் பகுதியில் நாம் கற்றுக் கொண்டபடி,

இயேசுவுக்கு ஒரு மதிப்பீட்டு அமைப்பு இருந்தது. அந்த மதிப்புமிக்கத் தன்மைகளை நாம் அறிக்கையிட வேண்டும்.

புதியஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில், ''அறிக்கையிடுதல்'' என்ற வார்த்தை ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இந்த வார்த்தைகள் பேசுதல் மற்றும் ஒரே வகையான தன்மை என்பவைகளுக்கான கிரேக்க வார்த்தைகளைக் குறிக்கிறது. ''அறிக்கையிடுதல்'' என்ற வார்த்தையின் சரியான பொருள் ''ஒரே வகையான தன்மையுடையவற்றைப் பேசுதல், அதே காரியத்தைக் கூறுதல்'' அல்லது ''ஒப்புக்கொள்ளுதல்'' என்பதாகும். இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுதல் என்றால், அவர் ஒரு மதிப்புமிக்க தன்மையைக் குறிப்பிடும்போது அவர் கூறுகிற அதே காரியத்தைக் கூறுவதாகும்.

இயேசு இந்த உலகத்தில் இருந்தபோது அநேக மக்களை நேசித்தார். இந்தப் பாடத்தில், நம்முடைய சத்துருக்களிடம் காட்ட வேண்டிய இயேசுவினுடைய அன்பைப்பற்றி கூற விரும்புகிறேன். இயேசு உலகத்திலுள்ள அனைவரைக் காட்டிலும் தனித்தன்மை வாய்ந்தவர், ஏனென்றால் அவர் தம்முடைய சத்துருக்களை நேசித்தார். அவர் சிலுவையிலிருந்து, தம்மைச் சிலுவையிலறைந்தவர்களுக்காக, ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் இருக்கிறார்கள்'' என்ற வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஜெபத்தை செய்தார். அவர் இந்த உலகத்தின் பாவிகளுக்காக மரித்துக் கொண்டிருந்தபோது, அவரை மரணத்திற்குட்படுத்தின அதே மக்களுக்காக அவர் மரித்துக்கொண்டிருந்தபோது, ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்'' என்ற இந்த உயரிய ஜெபத்தை அவரால் ஜெபிக்க முடிந்த அந்த வேளை எத்தனை அதிர்ச்சிமிக்கதாயிருந்திருக்கும்! (லூக்கா 23:34).

இயேசு தம்முடைய சத்துருக்களை நேசித்தபோது, அவர் நம் அனைவரையும் நேசித்தார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்:

''அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து <u>அக்கிரமக்காரருக்காக</u> மரித்தார். நாம் <u>பாவிகளாயிருக்கையில்</u> கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். நாம் தேவனுக்குச் <u>சத்துருக்களாயிருக்கையில்</u>, அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே'' (ரோமர் 5:6,8,10).

இந்த வேத பகுதியில், கிறிஸ்துவின் அன்பு நிபந்தனையற்றதால் தனித்தன்மை வாய்ந்தது என்று பவுல் கூறுகிறார். நாம் நல்லவர்களாக இருக்கும்போது மட்டும் அவர் நம்மை நேசிக்கவில்லை. நாம் பாவம் செய்து அவரைத் துக்கப்படுத்துகிற போதும் அவர் நம்மை நேசிக்கிறார். நாம் அக்கிரமக்காரராகவும், பாவிகளாகவும், அவருடைய சத்துருக்களாகவும் இருந்தபோது அவர் நமக்காக மரித்ததினால் அந்த அன்பை வெளிப்படுத்தினார். இயேசு தம்முடைய சத்துருக்களை நேசித்திரா விட்டால், நம்மில் ஒருவரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டிருக்க முடியாது.

பவுலினுடைய சிறப்புமிக்க அன்பின் அதிகாரத்தில் விவரிக்கப் பட்டுள்ள அதே விதமான அன்பு இயேசுவிடம் இருந்தது; அவருடைய அன்பு அழியாதது, ஏனென்றால் அது நிபந்தனையற்றது; கிரியைகளைச் சார்ந்திராதது (I கொரி 13: 4 -7).

இயேசு ஓர் முன் உதாரணமாக மட்டும் தம்முடைய சத்துருக்களை நேசிக்கவில்லை, ஆனால் நாமும் நம்முடைய சத்தருக்களை நேசிக்க வேண்டும் என்று கற்பித்தார். இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தை அளித்துக் கொண்டிருந்தபோது, உலகம் அறிந்திராத சிறப்புமிக்க நெறிமுறையைப் போதித்தார்:

''உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர் களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்திறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்'' (மத்தேயு 5:43-48).

இயேசு அந்தப் போதனையை அளித்தபோது, அவர் கூறியதின் சாராம்சம், ‘‘நீங்கள் ஒருவரையொருவர் நேசிப்பது மட்டுமல்ல, நேசிப்பதன் மூலம், அன்பின்மீது நான் வைக்கும் மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிட வேண்டும்.’’ சவால்மிக்க இந்தப் போதனையை அவர் ஒரு கேள்வியோடு முடிக்கிறார்: ‘‘உங்களைச் சிநேகிக்கிறவர் களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன?’’

இந்தக் கேள்வி கிரேக்க மொழியில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது: ‘‘உங்களைச் சிநேக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர் களானால், நீங்கள் செயல்படுத்தும் கிருபை என்ன? உங்களை நேசிப்பவர் களை நீங்களும் நேசிப்பதற்கு உங்களுக்குக் கிருபை தேவையில்லை.’’ உலகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக இயேசு இந்த முறையை அன்றைக்கு பயன்படுத்தினார், இன்றைக்கும் அதைப் பயன்படுத்துகிறார்; மக்கள் நேசிக்கப்பட முடியாத தங்களுடைய சத்துருக்களை நேசிக்கி றார்கள் என்ற உலகம் காணாத விந்தையை எடுத்துக் காட்டுவதன் மூலம் இயேசு அதைச் செய்கிறார்.

‘‘குருசேட்’’ என்ற புனித மதப் போராட்டங்களின்போது அசிசியைச் சார்ந்த பிரான்சிஸ், எதிரிப்படையில் காயப்பட்டிருந்த ஒரு போர் வீரனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். அப்போது குதிரையில் வந்த ஒரு ராணுவ வீரன் பிரான்சிசை நோக்கி, ‘‘அந்த தேவபக்தியற்ற மனி தன் சரியானதும் உங்களைக் கொன்றுவிடுவான்’’ என்று கூச்சலிட்டான். அதற்கு பிரான்சிஸ், ‘‘அப்படியென்றால் அவன் அதைச் செய்வதற்கு முன்பாக தெய்வீக அன்பு என்றால் என்ன என்பதை அறிந்திருப்பான்!’’ என்று பதிலளித்தார்.

‘‘நேசிக்கப்பட முடியாதவர்களை நேசிப்பதன் மூலம் நான் வைக்கும் மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிட்டால், நீங்கள் இந்த உலகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவீர்கள்!’’ என்ற கருத்தின்மூலம் இயேசு அப்போஸ்தலர்களுக்கு ஒரு சவாலை அளித்தார். நீங்கள் உங்களை நேசிக்கிறவர்களையே நேசிப்பீர்களென்றால், நீங்கள் இந்த உலகத்தின் மக்களிடமிருந்து வேறுபட்டவர்களல்ல. ஒவ்வொருவரும் தங்களை நேசிப்பவர்களை நேசிக்கிறார்கள். அது நிபந்தனையுள்ள மனித அன்பு.

இயேசு கிறிஸ்து செய்தது போல, நேசிக்கப்பட முடியாதவர்களை நிபந்தனையின்றி நேசிப்பது எத்தகைய ஒரு சவாலை நமக்கு அளிக்கிறது! நம்மை நேசிப்பவர்களை நேசிப்பதற்கு கிருபை

தேவையில்லை என்று இயேசு கூறியபோது, அவர் தம்முடைய சத்துருக்களை நேசித்தது போல, நிபந்தனையின்றி நேசிப்பதற்கு கிருபை தேவை என்று போதித்தார். உயிர்த்தெழுந்த, ஜீவிக்கிற கிறிஸ்து உங்களுக்குள்ளும் எனக்குள்ளும் இருக்கிறார் என்பது புதிய ஏற்பாட்டின் மிகவும் எழுச்சிமிக்க போதனையாகும். நேசிக்கப்பட முடியாத நம்முடைய சத்துருக்களை அவர் உங்கள் மூலமாகவும், என் மூலமாகவும் நேசிக்க முடியும் என்பது இதன் பொருளாகும்! (1யோவான் 4:7-21; கொலோசெயர் 1:27).

இந்தப் போதனையின் கடைசிப் பகுதி: ‘‘ஆகையால், பரலோகத்தி லிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.’’ இப்போது, ‘‘பூரண’’ என்ற வார்த்தை மக்களுக்குத் தொல்லை அளிக்கிறது. பூரண என்ற வார்த்தையின் பொருள் ‘‘முழுமையான’’ அல்லது ‘‘முதிர்ச்சியடைந்த’’ என்பதாகும். ‘‘பூரண’’ என்ற வார்த்தை உங்களுக்குத் தொல்லையளிக்குமென்றால், மத்தேயு 5:48 வசனத்தை வாசித்து, ‘‘பூரண’’ என்ற வார்த்தையை விட்டு விடுங்கள். ‘‘ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா சற்குணராயிருக்கிறது போல், நீங்களும் சற்குணராயிருப்பீர்கள்.’’ கிறிஸ்து சபையை நேசித்தது போல, புருஷர்கள் தங்களுடைய மனைவிகளை நேசிக்க வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் கட்டளை கொடுத்தார். கிறிஸ்து தம்மையே சபைக்குக் கொடுத்தது போல, அவர்களும் தங்களைத் தங்களுடைய மனைவிகளுக்குக் கொடுக்க வேண்டும் (எபேசியர் 5:25). கிறிஸ்து சபையை நேசித்து, அதற்காகத் தம்மையே கொடுத்ததுபோல, அவர்களும் தங்களுடைய மனைவிகளை நேசித்து, தங்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அது சாத்தியமாகுமா? ஆம்! கிறிஸ்து நமக்குள் வாழ்ந்தால், அது சாத்தியமாக மட்டுமல்ல, இயற்கையாக மாறிவிடும்.

நாம் இந்த உலகத்தில் கிறிஸ்துவினுடைய அன்பாக இருக்க வேண்டும். நாம் அன்புள்ளவர்களாக, நிபந்தனையின்றி அன்பு செலுத்து கிறவர்களாக இருக்க வேண்டும், ஏனென்றால் கிறிஸ்து நமக்குள்ளாகவும், நம் மூலமாகவும் வாழுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய ஒவ்வொரு சீஷனும் பிரான்சிஸ் கூறியதை, இந்த உலகத்தின் பாவியிடமும், இயேசு கிறிஸ்து மற்றும் பிதாவாகிய தேவனுடைய சத்துருவினிடமும்கூட கூற வேண்டும். என்ன ஒரு சவால்! உங்களுடைய சத்துருக்களை நேசிப்பதன் மூலம் இயேசு கிறிஸ்து வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா?

அத்தியாயம் – 2

இழந்து போனவர்கள்

இயேசு நம் மத்தியில் வாழ்ந்தபோது அவர் சுட்டிக் காட்டிய மதிப்புமிக்க தன்மைகளை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அவர் தம்முடைய மதிப்புமிக்க தன்மைகளை எடுத்துக் காட்டிய போது, தேவனுடைய முழுமையான மதிப்புமிக்க தன்மைகளின் ஒரு முக்கியத் துவத்தை நாம் பார்க்கிறோம், இந்தப் பாடத்தில், அவர் நகரத்திலிருந்த மிக மோசமான பாவியின்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையைக் காண்போம்.

நீங்கள் லூக்கா 19:1-10 வசனங்களுக்குத் திரும்பினால், ''இழந்துபோனவர்கள்'' என்று இயேசு அழைத்த குறிப்பிட்ட மக்களின் மீது அவர் வைத்த மதிப்புமிக்க தன்மைக்கான ஒரு மிகப் பெரிய உதாரணத்தை நாம் காண முடியும்.

''அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்து போகையில், ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக் கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்.

''இயேசு அந்த இடத்தில் வந்த போது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றார். அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான். அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்.

''சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனா யிருக்கிறானே. இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் என்றார்.''

இயேசுவைப் பற்றிய பல சம்பவங்களைப்போல, இந்த வேத பகுதியை மூன்று காட்சிகளையுடைய ஒரு நாடகத்தைப் போல எடுத் துரைக்க முடியும். வரி வசூலிப்பவர்களாகிய ஆயக்காரர்களுக்குத் தலைவனான சகேயு என்ற மனிதனை இயேசு சந்தித்ததை காட்சி ஒன்று விவரிக்கிறது. ஆயக்காரர்கள் பாவிகள் என எண்ணப்பட்டனர். ஏனென்றால் அவர்கள் தங்களுடைய சகயூதர்களிடமிருந்து ரோமர்களுக்காக வரிகளை வசூலித்தார்கள்; எனவே, இவர்கள் குறிப்பாக யூத மக்களால் வெறுக்கப்பட்டார்கள். இந்த ஆயக்காரர்கள் வரி வசூலிக்கும்போது தங்களுக்கென்று ஒரு சதவிகித்தைக் கூட்டி மக்களிடமிருந்து பணத்தை வாங்கினார்கள்; ஏழைகளான யூத மக்கள் இதைக் குறித்து ஒன்றும் செய்ய இயலாதவர்களாக உதவியற்ற நிலையில் இருந்தார்கள்.

காட்சி ஒன்றில், சகேயு கர்த்தரைப் பார்ப்பதற்கு அதிக ஆவலுடன் இருந்தபடியால் அவன் அவருக்கு முன்பாக ஓடி, ஒரு மரத்தின்மீது ஏறினான். இயேசு அவனைப் பேர் சொல்லி அழைத்து, ''நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும்'' என்றார். மக்கள் இதைக் கண்டு வருத்தமடைந்தார்கள், குறிப்பாக மதத்தலைவர்கள் அதிகமாக விசனமுற்றார்கள். ஒரு வேளை அந்த நகரத்தின் மிக முக்கிய மான மதப்பற்றுள்ள மக்கள், இயேசு தங்களுடன் அந்த நாளைச் செலவிட வேண்டுமென்று எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனால் இயேசு அனைத்துப் பாவிகளைக் காட்டிலும் மிக மோசமான பாவியாயிருந்த ஒரு ஆயக் காரனுடன் அந்த நாளைச் செலவிடுவதற்குத் தீர்மானித்தார்! அவன் ஒரு ஆயக்காரன் மட்டுமல்ல – ஆயக்காரர்களின் தலைவன்!

காட்சி இரண்டு, சகேயுவினுடைய வீட்டில் நடைபெறுகிறது. இயேசு ஒரு நாள் முழுவதும் அங்கு இருந்தார். சகேயுவினுடைய வீட்டில் என்ன நடந்தது என்பதைப்பற்றி நமக்கு எதுவும் தெரியவில்லை. காட்சி இரண்டில் என்ன நடந்தது என்பதை காட்சி மூன்று துவங்கிய விதத்தி லிருந்து மட்டுமே நாம் ஊகிக்க முடியும்.

காட்சி மூன்று துவங்கும்போது, அவர்கள் சகேயுவினுடைய வீட்டிலிருந்து வெளியே வருகிறார்கள்; சகேயு இயேசுவை நோக்கி, ''ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக் கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கின துண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்'' என்று கூறினான். அதற்கு இயேசு, ''இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே, இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்'' என்றார்.

வேறு வகையில் கூறவேண்டுமானால், இயேசு இவ்வாறு கூறுகிறார்: ''ஆயக்காரர்களுக்குத் தலைவனான சகேயுவைப் போன்ற மக்களுக்காக நான் வந்தேன். நான் ஒரு நாள் முழுவதையும் எரிகோவில் சகேயுவுடன் செலவிட்டதைப்பற்றி நீங்கள் ஆச்சரியப்பட்டால், நீங்கள் ஒரு காரியத்தை உணரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்: நான் அவனைப்போன்ற மக்களின்மீது மிக அதிகமான மதிப்பை வைத்திருக் கிறேன். உண்மையில், நான் அவனைப்போன்ற இழந்து போன மக்களை இரட்சிப்பதற்காக மட்டும் வரவில்லை. நான் அவர்களைத் தேடி, இரட்சிக்கும்படி வந்தேன்.''

தனிப்பட்ட விதத்தில் செயல்முறைப்படுத்துதல்

நீங்கள் இழந்து போனவர்களா? நீங்கள் ஒரு பாவியா? அப்படி யென்றால் சோர்ந்து போகாதீர்கள். உங்களைப் போன்ற மக்களுக்காக இயேசு கிறிஸ்து வந்தார். உங்களைப் போன்ற மக்களுக்கு அவர் மிக அதிகமாக மதிப்பளித்தார். அவருடைய பட்டியலில் நீங்கள் முதலிடத்தில் இருந்தீர்கள், இருக்கிறீர்கள். இயேசு ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணு வாரானால், நீங்கள் அழைக்கப்படுவீர்கள்!

நீங்கள் ஒரு சமய அமைப்பில் அல்லது ஒரு சபையில் பங்கு வகித்துக் கொண்டிருந்தால், நீங்கள் சகேயுவைப் போன்ற மக்களுக்கு மதிப்பளிக்காதபடி உங்களுடைய கிறிஸ்தவத்தில் அத்தனை தூய்மை யற்றவர்களாய் இருக்கிறீர்களா? இந்த உலகத்தின் சகேயுக்களிடம் நம்முடைய இருதயங்களில் அன்பு இருக்கிறதா என்று நாம் கரிசனை கொள்ள வேண்டும். சகேயுவைப் போன்ற மக்களின்மீது இயேசு வைத்த மதிப்பை அறிக்கையிடுகின்ற ஒரு அன்பை, பாவியிடம் இயேசு கிறிஸ்து செலுத்திய அன்பை, நாம் நம்முடைய இருதயங்களில் பெற்றிருக்க வேண்டும், நம்முடைய எண்ணங்களில் அல்ல.

அத்தியாயம் – 3

அவருடைய போதனைக்கு நம்முடைய அணுகுமுறை

நாம் இயேசுவினுடைய மதிப்பீட்டு அமைப்பைக் கருத்தில் கொண்டு ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்; இயேசு அறிவித்த மதிப்பு மிக்க தன்மைகளை நாம் அறிக்கையிட்டு, அவற்றைப் பற்றி அவர் கூறிய அதே காரியத்தைக் கூறுகிறோமா என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டிருக்கிறோம். இயேசுவினுடைய மதிப்புமிக்க தன்மைகளை நம் முடைய மதிப்புமிக்க தன்மைகளாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோமா?

நாம் அவருடைய போதனைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் தெளிவாகக் கூறினார். அவருடைய போதனை தேவனுடையது என்று அவர் வலியுறுத்தியபோது, அதை நாம் எவ்வாறு நிரூபிக்க முடியும் என்று அவர் நமக்குக் கூறினார். ''அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ள வனெவனோ, அவன்.... அறிந்துகொள்ளுவான்'' என்று அவர் போதித்தார் (யோவான் 7 : 17). நான் அறிந்தவற்றை மட்டுமே என்னால் செய்ய முடியும் என்பது நம்முடைய அறிவுப்பூர்வமான அணுகுமுறையாகும். அவருடைய போதனையை நாம் அணுகும் முறை இதுவல்ல, என்று இயேசு நமக்குக் கூறினார். நாம் அறிந்துகொள்ளுவது செயல்படுவதற்கு நேராக நம்மை வழி நடத்துகிறது என்று கூறுகிறோம். செயல்படுத்துதலே அறிந்துகொள்ளுதலுக்கு நேராக வழி நடத்துகிறது என்று இயேசு போதித்தார்.

இதே குறிப்பை மற்றொரு முறையில் விளக்கும் வகையில், இயேசு தம்முடைய போதகத்தை புதிய (புளிப்பில்லாத) திராட்சரசத்துடன்

ஒப்பிடுகிறார். அந்நாட்களில், மக்கள் புளிப்பில்லாத திராட்சரசத்தை ஒரு பழைய, எளிதில் உடையக் கூடிய துருத்தியில் ஒருபோதும் வைக்க மாட்டார்கள். அவர்கள் அவ்வாறு வைத்தால், புளிப்படைந்து கொண் டிருக்கும் திராட்சரசம் விரிவடைந்து, துருத்தியை வெடிக்கச் செய்திடும். தம்முடைய போதகம் அவர்களுடைய மனங்களில் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று இயேசு கூறினார். அந்த அழுத்தத்திற்கு அவர்கள் இணங்காவிட்டால், அவருடைய போதனை உண்மையாகவே ''அவர் களுடைய மனங்களை வெடிக்கச் செய்திடும்'' (லூக்கா 5:36 - 39).

இயேசுவின் போதனையை நடைமுறையில் பயன்படுத்தும்போது, நம்முடைய வாழ்க்கைக்கு அஸ்திபாரமிடுகின்ற ஒரு நம்பிக்கை அமைப்பாக அப்போதனை மாறிவிடும் என்று அவர் போதித்தார். நம்முடைய வாழ்க்கையில் கடினமான வேளைகள் வரும்போது, நாம் நொறுங்கிப் போவதில்லை. நம்முடைய நம்பிக்கை அமைப்பு இயேசுவினுடைய போதனையை அடிப்படையாகக் கொண்டிருந்தால், நாம் வாழ்க்கையின் புயல்களினால் தோற்கடிக்கப்படுவதில்லை:

''ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன் மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது'' (மத்தேயு 7 : 24 - 27).

கலாச்சாரத்தில் புரட்சியை ஏற்படுத்துவது தம்முடைய போதனையின் நோக்கம் என்றும் இயேசு போதித்தார். இயேசு உண்மையாகவே மேசியாவாக இருந்தால், அவர் அதிக ஒழுக்கமுடையவராகவும், சட்டங் களைக் கடைபிடிப்பதில் சிறந்தவராகவும் விளங்கவேண்டுமென்று மதத்தலைவர்கள் அவரிடம் கூறினார்கள். ஆனால் அவர் ஓரளவிற்கு வேடிக்கையான ஒரு உருவகத்தின் மூலமாக அவர்களுக்கு பதிலளித்தார்:

''என்னுடைய வாழ்க்கை முறையில் நான் இருப்பதிலிருந்து வேறுபட்டு வாழும்படி எனக்கு ஆலோசனை சொல்வதற்கு நீங்கள் யார்? அது உங்களை சிறுபிள்ளைகளைப் போலாக்குகிறது அல்லவா?'' சந்தை வெளியில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுபிள்ளைகள் அவர்கள் கவனித்த இரண்டு காரியங்களை பாவனை செய்து விளையாடினார்கள் - அவை திருமணங்களும், அடக்க ஆராதனைகளும்.

அவர்கள் தங்களுடைய வேலையில் ஓய்வின்றி ஈடு பட்டிருக்கும் வியாபாரிகளிடம் சென்று, ''உங்கள் வேலைகளை நிறுத்தி, அடக்க ஆராதனை விளையாட்டை எங்களுடன் விளையாடி, துக்கங் கொண்டாடுங்கள்'' என்று கூறுவார்கள். அல்லது அவர்கள் அவர்களிடம், ''உங்கள் வேலைகளை நிறுத்தி, எங்களுடன் திருமண விளையாட்டை விளையாடி, அதிக சந்தோஷப்படுங்கள்'' என்று கூறுவார்கள் (லூக்கா 7 : 31 - 35). ஆனால் வேலையில் ஓய்வில்லாமல் இருக்கும் வியாபாரிக ளுக்கு தங்களுடைய வேலைகளை நிறுத்தி, சிறுபிள்ளைகளுடன் சிறிய விளையாட்டுக்களை விளையாட அவர்களுக்கு நேரமில்லை. இயேசு சமயச்சடங்குகளில் நிலை நிறுத்தப்பட்டிருந்த சமையத்தலைவர்களிடம், ''உங்களுடைய சிறிய சமயப் பிரகாரமாள விளையாட்டுகளை விளையாடு வதற்கு நான் வரவில்லை'' என்று கூறினார்.

இயேசு தம்முடைய போதகத்தின் மீது ஒரு கிளர்ச்சியூட்டும் மதிப்பை வைத்த மற்றொரு இடத்தை வேதவாக்கியத்தில் காண்கிறோம். அவர் கூறினார்: ''இப்படியிருக்கிறபடியால், பரலோக ராஜ்யத்துக் கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்'' (மத்தேயு 13 : 52). அவருடைய இந்த வார்த்தைகளைப் பற்றிய என்னுடைய அனுமானம் என்னவென்றால்: ''நீங்கள் என்னுடைய போதனையை புரிந்து கொண்டால், பழைய ஏற்பாட்டை உண்மையாகவே புரிந்து கொள்வீர்கள்; பழைய ஏற்பாட்டை ஒரு புதிய, சுத்தமான முறையில் உங்களால் போதிக்க முடியும். நீங்கள் நியாயப்பிரமாணத்தின் உட் கருத்தை உணர்ந்து கொள்வீர்கள் - பழைய ஏற்பாட்டின் அழகான, ஊக்கமளிக்கும் புத்தகங்கள் அனைத்திலும் போதிக்கப்பட்டுள்ள சத்தியத்தின் ஆழத்தை, சத்தியத்தின் மையத்தை அறிந்து கொள்வீர்கள்''.

சங்கீதம் 23-ஐ பற்றிய ஒரு புதிய கருத்தை ஒருவர் போதிக்கக் கேட்கிற அனுபவத்தைக் காட்டிலும் மேலான ஆசீர்வாதம் கிடையாது. ஒரு நபர் சங்கீதம் 23-ஐப் போதித்ததை நான் கேட்டபோது, ‘‘இது என்னை சலிப்படையச் செய்கிறது’’ என்று நினைத்ததை நினைவுகூருகிறேன். சங்கீதம் 23 பற்றி நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இந்த சங்கீதத்தைப் பற்றி நாம் கேட்டிராத எதைக் குறித்து இவர் பேசப் போகிறார்? என்றாலும், 40 நிமிடங்களாக அவர் பேசியதைக் கேட்டபின்பு, சங்கீதம் 23-ஐ பற்றி அவர் போதித்த அனைத்தும் எனக்குப் புதிதாக இருந்தது என்பதை நான் உணர்ந்தேன்.

ஒருவேளை இந்த உயர்வான மதிப்புமிக்க தன்மையை இயேசு தம்முடைய போதகத்தின்மீது வைத்தபோது அவர் இதையே வலியுறுத்தினார் என்று கூறமுடியும். நாம் உண்மையாகவே அவருடைய போதகத்தைப் புரிந்து கொள்ளும்போது, புதிய காரியங்களையும், பழைய காரியங்களையும் போதிக்கத்தக்க ஒரு போதகனாக மாற முடியும் அல்லது பழைய சத்தியங்களை ஒரு புதிய நல்ல முறையில் நம்மால் போதிக்க முடியும் என்று அவர் நமக்குக் கூறினார்.

அத்தியாயம் – 4

தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை

இயேசு கிறிஸ்துவினுடைய மதிப்புமிக்க தன்மைகளைப் பற்றி நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். அவர் தம்முடைய மூன்று வருட பொது ஊழியத்தில், தேவனுடைய வார்த்தைக்கு மிகவும் அதிகமாக மதிப் பளித்தார். அவர் புதியவற்றையும் வித்தியாசமான காரியங்களையும் போதிப்பதாக சமயத்தலைவர்கள் அவரிடம் கூறி, அவருக்குத் தொடர்ந்து சவால் விடுத்துக் கொண்டே இருந்தனர். இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தில், பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின்மீது தாம் வைத்த மதிப்புமிக்க தன்மையை வெளிப்படுத்தினார்:

‘‘நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக் கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறை வேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப் பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவை களைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ (மத்தேயு 5:17-20).

‘‘இந்தப் பழைய ஏற்பாட்டு பிரமாணங்களின்படி செய்து, அவற்றைப் போதிக்கிற எவனும் பரலோகராஜ்யத்தில் பெரியவனாக

இருப்பான்'' என்று இயேசு போதித்ததைக் கவனியுங்கள். பழைய ஏற்பாடு பிரமாணங்களைப் புரிந்துகொள்வது மட்டுமல்ல, அவற்றைச் செய்து, பின்பு அவற்றைப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். ''பழைய ஏற்பாட்டு வேதவாக்கியத்தைப் பற்றிய இந்த அணுகுமுறையை உண்மையாகவே புரிந்துகொண்டு, பயன்படுத்து கிறவர்களுடைய நீதி, சதுசேயர் பரிசேயர்களுடைய நீதியைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருக்கும்'' என்று கூறி அவர் தம்முடைய போதனையை முடிக்கிறார்.

உபாகமப் புத்தகத்தின்படி, பழைய ஏற்பாட்டு வேத வாக்கியத்தின் நோக்கம், மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாகும் (உபாகமம் 8 : 1 - 3). வேதாகமத்தை 50 ஆண்டுகளுக் கும் மேலாகக் கற்று, போதித்துக் கொண்டிருக்கும் அனுபவத்தின் மூலம், வேதாகமத்தை எவ்வளவாக அறிந்து கொள்கிறோமோ, அவ்வளவாக வாழ்க்கையைப் புரிந்து கொள்கிறோம் என்றும், வாழ்க்கையை எவ்வளவாக அனுபவிக்கிறோமோ, அவ்வளவாக வேதாகமத்தைப் புரிந்து கொண்டு, அதன் மதிப்பை உணருகிறோம் என்றும் நான் கண்டறிந்தேன்.

அப்போஸ்தலர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை யின் முக்கியத்துவத்தைக் குறித்த இயேசுவின் இந்த ஜெபத்தைக் கவனியுங்கள்: '' நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத் தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது'' (யோவான் 17 : 14). அப்போஸ்தலர்களுக்கு இயேசு அளித்த வார்த்தையை அவர்கள் புரிந்து கொண்டு, அதன்படி வாழ்ந்தார்கள் என்ற உண்மைக்கு அத்தாட்சி, உலகம் அவர்களைப் பகைத்தது என்ற உண்மையாகும். இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாக நம்மை நாமே கேட்க வேண்டிய ஒரு சுவாரஸ்யமான கேள்வியை இது எழுப்புகிறது: ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிதாவினுடைய வார்த்தையை எனக்குக் கொடுத்ததினாலும், நான் அதன்படி வாழுகிறேன் என்ற காரணத்தினாலும் எவராவது என்னை வெறுக்கிறார்களா?''

இயேசு அப்போஸ்தலர்களுக்காக ஜெபிக்கையில், இந்த ஜெபத்தை ஜெபிக்கிறார்: ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்.'' பின்பு அவர் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய இந்த வாசகத்தைக் குறிப்பிடுகிறார்: ''உம்முடைய வசனமே சத்தியம்'' (17). ''பரிசுத்தமாக்குதல்'' என்ற வார்த்தையின் பொருள், ''பிரித்தெடுக்கப் படுதல்'' என்பதாகும். ''அவர்களை உமக்காக பிரித்தெடுத்துக் கொள்ளும். இந்த உலகத்தில் அவர்களுக்கு பாதுகாப்பளிக்கிற ஒரு உறவுமுறையை அவர்களுக்குத் தாரும்'' என்பதே அவருடைய ஜெபமாக இருந்தது. ஆடுகளை (''ஆட்டுக்குட்டிகளை'' என்று லூக்கா சொல்லுகிறார்) ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல அவர் அவர்களை பெரிதும் ஆபத்தான இடத்திற்குள் அனுப்பினார் (லூக்கா 10:3; மத்தேயு 10:16). எனவே, அவர் பிதாவினிடம் இவ்வாறு ஜெபிக்கிறார்.: ''அவர்களை உலகத்திலிருந்து எடுத்துவிடாதேயும், ஏனென்றால் அவர்கள் உலகத்திலிருந்து வந்து விட்டால் அவர்களுக்கு நியமிக்கப்பட்ட வேலையை அவர்களால் செய்ய முடியாது. ஆனால் அவர்கள் இந்த உலகத்திலிருக்கையில், பெரிதும் ஆபத்தான இந்த இடத்தில், அவர்களை உமக்காக பிரித்துவிடும். அதைச் செய்வதற்கு உம்முடைய சத்தியத்தைப் (உம்முடைய வார்த்தை) பயன்படுத்தும்.''

பின்பு அவர் தேவனுடைய வார்த்தையைப்பற்றி இந்த மகத்தான பிரகடனம் செய்கிறார்: ''உம்முடைய வசனமே சத்தியம்'' (யோவான் 17 : 17). வேதவாக்கியத்தைப்பற்றிய ஒரு மிகப் பெரிய உட்கருத்து இங்கு வெளிப்படுகிறது. வேதவாக்கியமே சத்தியம். அந்த சத்தியம் உங்களைத் தேவனுக்காகப் பிரித்தெடுக்கும். அவரையும் அவருடைய வார்தகை யையும், அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்படும் மதிப்பீட்டு அமைப்பையும் வெறுக்கிற ஒரு உலகத்தில் நீங்கள் வாழும்போது, அந்த சத்தியம் அவருடனான ஒரு உறவு முறையை உங்களுக்கு அளிக்கும். நீங்கள் தேவனுடைய வார்த்தையைச் செயல்படுத்தும்போது, நீங்கள் அதை அறிந்து கொள்வீர்கள் என்பதை நினைவில் வைத்து, அந்த சத்தியத்தைத் தேடி வேதவாக்கியத்திடம் எப்போதும் வாருங்கள் (யோவான் 7:17). உங்களை விடுதலையாக்கும் சத்தியத்தை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்; கிறிஸ்துவினுடைய மதிப்புமிக்க தன்மைகளுக்கு எதிராக இருக்கும் ஒரு உலகத்தில், அந்த மதிப்புமிக்க தன்மைகளை நீங்கள் வாழ்ந்து காட்டும்போது, தேவனுக்காகவும், கிறிஸ்துவிற்காகவும் உங்களைப் பிரித்தெடுக்கும் சத்தியத்தை நீங்கள் அறிந்து கொள்வீர்கள் (யோவான் 8:30-35; 17:14).

தேவனுடைய வார்த்தையின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நாம் அறிக்கையிடுவோமா? எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய வேதவாக்கியங்களில் காணப்படும் சத்தியத்தின்மீது இயேசு கிறிஸ்து வைத்த மதிப்புமிக்க தன்மையை நாம் கருத்தில் கொள்ளும்போது, இந்த சவாலை நாம் சந்திக்க வேண்டும்.

அத்தியாயம் – 5

அவருடைய கிரியை

இயேசுவின் மதிப்புமிக்க தன்மைகளின் அமைப்பைக் கவனித்து, சுவிசேஷங்களின் மூலமாக நாம் அவரைப் பின் பற்றிக் கொண்டிருக் கிறோம். இந்தப் பாடத்தில், இயேசு இந்த உலகத்தில் நிறைவேற்றும்படி பிதாவானவர் அவரை அனுப்பின கிரியையின்மீது அவர் வைத்த மதிப்புமிக்க தன்மையைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பிதாவினுடைய கிரியையைச் செய்து முடிப்பதில் இயேசுவுக்கு இருந்த ஆழமான வாஞ்சையைக் கவனித்திருக்கிறீர்களா?

உதாரணமாக, அவர் ஒரு சிறுபிள்ளையாக இருந்தபோது, அவர் தம்முடைய தரிசன வாசகத்தைக் கூறுவதை நாம் கேட்கிறோம்: ''என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா'' (லூக்கா 2 : 49). ''பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பின வருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்: ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது'' என்று இயேசு கூறியபோது அவர் தம்முடைய கிரியையைக் குறிப்பிட்டார் என்று நிச்சயமாகக் கூற முடியும் (யோவான் 9 : 4). இயேசு கிறிஸ்து ஒரு பணித்திட்டத்துடன் வந்தார்; அவருடைய பணித்திட்டம் என்ன என்பதை அவர் அறிந்திருந்தார்.

மற்றொரு சமயத்தில், அப்போஸ்தலர்கள் அவருக்காக வாங்கி வந்த உணவை அவர் சாப்பிட விரும்பவில்லை. அவர்கள் அவருக்கு உணவைக் கொடுத்தபோது, ''நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது'' என்று கூறி அவர் அதை மறுத்தார் (யோவான் 4 : 34). இயேசு தாம் செய்யும்படி பிதா அனுப்பின கிரியையைச் செய்வதே

தம்முடைய போஷாக்கு, உணவு, நிறைவு என்பதை வலியுறுத்தி நமக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கினார்.

''பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்'' என்ற தீராத வாஞ்சையுடன், ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது என்பதை அறிந்து, பூமியில் அவருடைய வாழ்க்கையும், பணியும் முடிவை நெருங்குகிறது என்பதை உணர்ந்து, தம்முடைய வாழ்க்கையின் முடிவில் நிற்பவராய், ''பூமியிலே நான் உம்மை மகிமைப் படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்'' என்று அழகாக ஜெபித்தார் (யோவான் 17 : 4).

ஒரு மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன? தேவனை மகிமைப் படுத்தி, அவரை அனுபவிப்பதே என்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறுகிறபடி, தேவனை மகிமைப்படுத்தி, அவரை அனுபவிப்பது ஒரு மனித வாழ்க்கையின் நோக்கமாயிருக்கிறது. இப்போது, நாம் தேவனை மகிமைப்படுத்துவது எப்படி? இது ஒரு மிகப் பெரிய கேள்வி, இயேசு இக்கேள்விக்கான பதிலுக்கு முன்மாதிரியானார். ''பூமியிலே நான் உம்மை மகிமைப் படுத்தினேன்'' (நாம் தேவனை மகிமைப்படுத்துவது எப்படி?) ''நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்'' (நாம் இப்படியாக தேவனை மகிமைப்படுத்த வேண்டும்).

இயேசு சிலுவையை ஏற்றுக்கொண்டு அதில் அவர் அனுபவித்த அனைத்துப் பாடுகளையும் சகித்து முடித்த பின்பு, அவருடைய கடைசி வார்த்தைகள் என்ன? சுவிசேஷங்கள் கூறுவதை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், சிலுவையில் இயேசுவினுடைய கடைசி வார்த்தைகள், ''முடிந்தது... பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்பு விக்கிறேன்'' என்று அவை நமக்குக் கூறுகின்றன (யோவான் 19 : 30; லூக்கா 23 : 46).

பின்வரும் வார்த்தைகள் தன்னுடைய விசுவாசத்திற்காகக் கொடூரமாகக் கொல்லப்பட்ட ஒரு மிஷனரியினுடைய நாட்குறிப் பேட்டிலிருந்து எடுக்கப்பட்டவை: ''தேவனுடைய திட்டத்தின்படி நீங்கள் மரிக்க வேண்டிய வேளை வரும்போது, நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் மரிப்பது மட்டுமே என்பதில் கவனமாக இருங்கள்.'' இயேசு ஒரு பூரணமான வாழ்க்கையை வாழ்ந்தபின்பு, அந்த பரிபூரணமான வாழ்க்கையினுடைய முடிவிற்கு அவர் வந்தபோது, ''அது முடிந்தது.

பிதாவே; நான் செய்ய வேண்டியதெல்லாம் மரிப்பது மட்டுமே. பிதாவே, என்னுடைய ஆவியை உம்முடைய கைகளில் ஒப்புவிக்கிறேன். நான் செய்யும்படி நீர் எனக்குக் கொடுத்த கிரியையை நான் செய்து முடித்து விட்டேன்'' என்று அவரால் கூறமுடிந்தது.

இயேசு ஒரு பணித்திட்டத்தைப் பெற்றிருந்தார்; அவர் அந்தப் பணித்திட்டத்தைப்பற்றி பல காரியங்களைக் கூறினார். உங்களுடைய பணித்திட்டத்தைப்பற்றி நீங்கள் கூறமுடியுமா? பிதா உங்களிடம் ஒப்புவித்திருப்பதாக நீங்கள் நம்புகின்ற கிரியையைச் செய்து முடிப்பதினால் ஏற்படும் மன நிறைவை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? உங்களுடைய கிரியை செய்து முடிக்கப்பட்டதன் உணர்வை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? நீங்கள் உங்களுடைய வாழ்க்கையின் முடிவிற்கு வரும்போது, ''அது முடிந்தது'' என்று உங்களால் கூறமுடியுமா? ''பிதாவே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். பிதாவே, நான் செய்ய வேண்டியதெல்லாம் மரிப்பது மட்டுமே'' என்று இயேசுவுடன் சேர்ந்து உங்களால் கூறமுடியுமா?

அத்தியாயம் – 6

தேவனுடைய வார்த்தையை நாம் எவ்வாறு கேட்கிறோம்

இயேசுவினுடைய சிறந்த போதனைகளில் ஒன்று விதைக் கிறவனைப் பற்றிய உவமையாகும். நீங்கள் அதைக் கவனமாக தியானித்தால், அது உண்மையில் விதைகளைப் பற்றிய உவமையாகும், ஏனென்றால் இந்த உவமை தேவனுடைய வார்த்தையை நாம் எவ்வாறு கேட்கிறோம் என்றே கூறுகிறது. தேவனுடைய வார்த்தை நான்கு வகையான நிலங்களில் விழுகிறது; தேவனுடய வார்த்தையை நாம் கேட்கும்போது நாம் அதற்கு பதிலளிக்கிற நான்கு வழிகளை இது எடுத்துக் காட்டுகிறது. எனவே, இந்தப் போதனையை ''நிலங்களைப் பற்றிய உவமை''என்று அழைக்க முடியும். இந்த உவமை உண்மையில் எதைப் பற்றிக் கூறுகிறது என்று நாம் உணரும் போது, ''நான்கு நபர்களில் நீங்கள் யார்?'' என்ற கேள்வி எழும்புகிறது.

இந்த உவமையில், ஒரு விவசாயி தன்னுடைய வயலில் விதைகளை விதைக்கும்படி சென்றான் என்று இயேசு கூறினார். சில விதைகள் வழியருகே விழுந்தன. எனவே, வானத்தின் பறவைகள் வந்து அவற்றைத் தின்றன. அந்த விதைகள் நிலத்தை ஊடுருவிச் செல்ல வில்லை அல்லது எதையும் விளைவிக்கவில்லை. இதற்குரிய அர்த்தத்தை இயேசு விளக்கியபோது, மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டும், அதைப் புரிந்து கொள்ளாதபடி பொல்லாங்கன் இடைபடுவதைக் கூறி னார். அந்த வார்த்தை அவர்கள் மனதில் உட்புகாதபடி பொல்லாங்கன் வந்து, தேவனுடைய வார்த்தை என்னும் விதையை எடுத்துப் போடுகிறான்.

விவசாயியின் விதை விழுந்த மற்றொரு வகையான நிலம் மண்ணில் லாத கற்பாறை இடமாகும். விதைகள் மண்ணிற்குள் வேர்விடுவதை அந்த நிலத்தின் கற்பாறைகள் தடுக்கின்றன. விதைகளால் மண்ணிற்குள் ஊடுருவிச் சென்று வேர்களை விட முடியவில்லை. வெயில் ஏறினபோது, விதைகள் வெப்பத்தினால் அழிக்கப்பட்டு, கனிகொடுக்க முடியாமல் போய்விடுகின்றன.

இயேசு இந்த உவமைக்கு விளக்கமளிக்கையில், இப்படிப்பட்ட மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது, அது அவர் களுடைய மனங்களை ஊடுருவிச் செல்கிறது, ஆனால் அவர்களுடைய சித்தங்களை அல்ல என்று கூறினார். இயேசு ''கடினப்பட்ட இருதயங்களைப்'' பற்றி அடிக்கடி பேசினார். இந்த உருவகத்தை இயேசு பயன்படுத்தியபோது, நம்முடைய சுயசித்தங்கள் தங்கியிருந்து, தீர்மானங்கள் எடுக்கப்படும் இடமான நம்முடைய விருப்பங்களின் மையம் கடினத்தினால் மூடப்பட்டிருக்கிறது என்று அவர் போதித்தார். கடினப்பட்டிருக்கும் இருதயங்களைப் பற்றி இயேசு போதித்தவற்றை இந்த இரண்டாம் வகை நிலம் விளக்குகிறது.

மூன்றாம் வகையான நிலம், விவசாயியினுடைய விதைகளை ஏற்றுக் கொண்டு பயிரை முளைப்பித்தது. என்றாலும், பயிர் வளர்ந்தபோது, அதனருகில் வளர்ந்த களைகள் பயிரை நெருக்கிப் போட்டதால், அவற்றால் கனி கொடுக்க முடியவில்லை. இந்தக் களைகள் பல மொழி பெயர்ப்புகளில் ''புதர்கள்'' அல்லது ''முள்ளுகள்'' என்று அழைக்கப் படுகின்றன. இந்த உவமைக்கு இயேசு விளக்கமளித்தபோது, பணம், உடைமைகள் அல்லது இவற்றின் பற்றாக்குறையால் ஏற்படும் கவலை, அழுத்தம் போன்ற இந்த உலகத்தின் விசாரங்கள், உவமையில் கூறப் பட்ட களைகளாகும் என்று அவர் கூறினார். மக்களுடைய கவனம் பணத்தினாலும், உடைமைகளாலும் திசை திருப்பப்படுவதால், அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது அவர்களால் கனி கொடுக்க முடிவதில்லை.

பின்பு அவர், சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன என்று கூறினார். இந்த நல்ல நிலத்திற்கு மேலிருக்கும் காரியங்களோ அல்லது கீழிருக்கும் காரியங்களோ விதைகள் கனி கொடுப்பதைத் தடுக்கப் போவதில்லை. அந்த விதைகள் முப்பதும், அறுபதும், நூறுமாகப் பலன் தந்தது. இந்த நான்காம் வகையான நிலம், ஒரு மனிதன் தேவனுடைய

வார்த்தையைக் கேட்டு, அதைத் தற்காத்து, முப்பதும், அறுபதும், நூறுமாகப் பலன் கொடுப்பதைக் குறிக்கிறது என்று இயேசு விளக்கமளித்தார். தேவனுடைய வார்த்தை அவர்களுடைய புரிந்து கொள்ளும் ஆற்றலை ஊடுருவுகிறது. அது அவர்களுடைய சுயசித்தத்தை ஊடுருவுகிறது; அவர்கள் செய்யும்படி அவர்களுக்காக தேவனுடைய வார்த்தை போதித்து, சவால் விடுத்து, ஊக்குவிக்கும் காரியங்களை அவர்கள் செய்வதிலிருந்து மற்றெந்த காரியங்களும் அவர்களைத் திசை திருப்புவதில்லை. அவர்கள் இயேசு கிறிஸ்துவிற்காக கனி கொடுக்கும் சீஷர்களாக மாறுகின்றனர்.

இந்த அழகான உவமையில், இயேசு மீண்டுமாக தேவனுடைய வார்த்தையின்மீது ஒரு மிகப் பெரிய மதிப்பை வைக்கிறார், நாம் தேவனுடைய வார்த்தைக்குச் சரியான முறையில் செவி கொடுத்தால், அது நம்மைக் கனி கொடுக்கிறவர்களாக மாற்றுகிறது. இறுதியில், தேவனுடைய வார்த்தைக்கு நாம் எவ்வளவு அதிகமாக மதிப்பளிக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகிறோம், ஒரு திருமறைக் கோட்பாட்டிற்கு ஒப்புதல் தெரிவிப்பதினால் அல்ல, தேவனுடைய வார்த்தை நம்முடைய புரிந்து கொள்ளும் ஆற்றலையும், நம்முடைய சுயசித்தங்களையும் ஊடுருவிச் செல்வதற்கு அதை அனுமதிப்பதினால் மட்டுமே. நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது, விசுவாசம் மற்றும் அதனுடைய நடைமுறை செயல்பாடின் நம்முடைய இறுதியான அதிகாரமான தேவனுடைய வார்த்தையை நாம் பயன்படுத்தி, அதை வாழ்ந்து காட்டுவதிலிருந்து மற்றெந்த காரியமும் நம்மை திசை திருப்புவதற்கு அனுமதிக்கக்கூடாது.

இந்த உவமையில், தேவனுடைய வார்த்தையை நாம் கேட்டு அதைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தைப்பற்றி இயேசு வலியுறுத்து வதை மீண்டுமாகப் பார்க்கிறோம். ''நாம் உண்மையில் விசுவாசிக்கிற காரியங்களை மட்டுமே செய்கிறோம். எஞ்சியுள்ள மற்ற காரியங்கள் அனைத்தும் வெறுமனே சமயப்பிரகாரமான பேச்சுகள்; இவை, எவருக்கும் தேவைப்படுவதில்லை!'' என்று இயேசு பல இடங்களில், பல வழிகளில் கூறுவது போலத் தோன்றுகிறது.

அத்தியாயம் – 7

பாவிகளை நேசித்தல்

நாம் இயேசுவினுடைய மதிப்பீட்டு அமைப்பைப் பற்றி கற்றுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பாடத்தில், என்னோடு சேர்ந்து பாவிகளின் மீது, அவர் வைத்த மதிப்புமிக்க தன்மையைத் தியானியுங்கள். இந்த அழகான வார்த்தைகளைப் புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கிறோம் :

பின்பு இயேசு பட்டணத்தை விட்டு புறப்பட்டுப் போகையில், ஒரு ஆயத்துறையில், ஏமாற்றுவதில் பேர் பெற்ற ஒரு ஆயக்காரனான வரி வசூலிப்பவனைக் கண்டார். அந்த மனிதனின் பெயர் லேவி (அல்லது மத்தேயு). இயேசு அவனிடம், ''எனக்குப் பின் சென்று வா'' என்றார். எனவே லேவி எல்லாவற்றையும் விட்டு, எழுந்து, அவருக்குப் பின் சென்றான்.

விரைவில் லேவி இயேசுவை சிறப்பு விருந்தினராக அழைத்து தன்னுடைய வீட்டில் விருந்து பண்ணினான். அநேக ஆயக்காரர்களும், மற்ற விருந்தினர்களும் வந்திருந்தார்கள். இயேசு இப்படிப்பட்ட இழிவான பாவிகளுடன் உண்பதைப் பற்றி பரிசேயர்களும், நியாயப்பிரமாணப் போதகர்களும், இயேசுவினுடைய சீஷர்களிடம் கடுமையாகக் குறை கூறினார்கள். இயேசு அவர்களுக்குப் பதிலாக, ''பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர் களுக்கு வேண்டியதில்லை. பாவிகள் தங்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்புபடி அவர்களை அழைப்பதே என்னுடைய நோக்கம்: தங்களை நல்லவர்கள் என்று எண்ணிக் கொள்பவர்களுடன் என்னுடைய நேரத்தைச் செலவிடுவது என்னுடைய நோக்கமல்ல'' என்று கூறினார் (லூக்கா 5 : 27 - 32).

நாம் இந்தப் பாடத்தில் ஏற்கனவே கற்றிருப்பதுபோல இயேசு மக்களுடன் இடைபட்ட அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரு ஊக்கமான அன்பை வெளிப்படுத்தினார். இயேசுவைச் சந்தித்த மக்கள் அவருடைய கண்களிலும் சைகைகளிலும் அன்பைப் பார்த்தார்கள்; அந்த அன்பு அவர்களை ஈர்த்தது.

நான் ஒரு பணியாளனாகவும் இருந்து கொண்டு அதில் வந்த வருமானத்தின்மூலம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் இரவில் ஒரு வகுப்பறையில் ஒரு பிரபலமான ஆவிக்குரிய தலைவர் அப்போது தான் தன்னுடைய பிரசங்கத்தை முடித்திருந்தார். நான் துடைப்பத்தையும், வாளியையும் எடுத்துக் கொண்டு, அறையைச் சுத்தம் செய்யத் துவங்கினேன். இந்த மனிதர் என்னிடம் திரும்பி, என்னுடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''வாலிபனே, உன்னுடைய பெயர் என்ன?'' என்று கேட்டார். அவர் என்னுடைய முகத்தைப் பார்த்தார்; நான் அந்த அறையைச் சுத்தம் செய்ய வந்த மாணவனாக மட்டுமே இருந்தாலும், அவர் என்னைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த இரண்டு நிமிடங்களில், முழு உலகத்திலேயும் மிக முக்கியமான நபர் நான் மட்டுமே என்று உணர்ந்தேன்.

இயேசு தம்முடைய முழு கவனத்தையும் உங்களிடம் திருப்பி, கண்ணிமைக்காமல் உங்களைப் பார்த்து, உங்களை நேசித்தால் எவ்வாறு இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அவர் நேசித்த மக்களிடம் அது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்! பாவிகளும், ஆயக்காரர்களும் இயேசுவிடம் வெகுவாக ஈர்க்கப்பட்டதற்கு காரணம் என்ன? ஏனென்றால் அவர் நிபந்தனையற்ற அன்பையும், ஏற்றுக் கொள்ளும் தன்மையையும் பிரதிபலித்தார், அவருடைய முகபாவங் களிலும், சைகைகளிலும் அவர் அவர்களை நேசித்தார் என்பதைக் காண முடிந்தது. இயேசு ஆயக்காரர்களுடனும் பாவிகளுடனும் உட்கார்ந்து சாப்பிட்டதை லூக்கா விவரிக்கிறார்.

நான் உலகப்பிரகாரமான விருந்துகளுக்குச் சென்றிருக்கிறேன்; அங்கு பேசிய பேச்சாளர் உலகப் பிராகாரமானவர். அவர் பேசிய நகைச்சுவையான காரியங்கள் தகுதியற்றவையாக இருந்தபடியால், அது அனைவரையும் சங்கடத்திற் குள்ளாக்கியது, ஏனென்றால் நான் ஒரு போதகர் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள். இப்படிப்பட்ட நிர்ப்பந்தமான சூழலில், எனக்குள்ளாக ஒரு கேள்வியை நான்

கேட்பதுண்டு : ‘‘இயேசு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் எப்படி பங்கு பெற்று, வரவேற்கப்படாதவராக அல்லது விரும்பப்படாதவராக இருந்திருக்க முடியும்?’’ இக்கேள்விக்கான பதில், இயேசு ஆயக்காரர் களையும் பாவிகளையும் நேசித்தார் - இயேசு அவர்களை நேசித்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்பதே என்று நான் நம்புகிறேன்.

இயேசு உலகத்திலிருந்தபோது, ஆயக்காரர்களையும் பாவிகளையும் நேசித்தாரென்றால், இன்று அவர் அவர்களை உங்கள் மூலமாகவும் என் மூலமாகவும் நேசிக்க விரும்புகிறாரா? இயேசு பாவிகளின் நண்பரா யிருந்தார். உங்களுடைய நண்பர்கள் பாவிகளாக இருக்கிறார்களா? பாவிகள் என்று தெளிவாகக் காணப்படும் மக்களுடன் நீங்கள் இடை படுகீறீர்களா? இயேசு கிறிஸ்துவுடன் உங்களுடைய உறவுமுறையை கருத்தில் கொண்டு, உங்களுடைய வாழ்க்கையில் குறுக்கிடும் பாவிகளிடம் அவர் யாராக, எப்படிப்பட்டவராக இருக்க விரும்புகிறாரோ, அவ்வண்ணமாக இருப்பதில் அவர் தடையற்றவராக, கட்டுப்பாடற்றவராக இருக்கிறாரா என்பதை கவனித்துப் பாருங்கள்.

பாவிகளை தேடிச் சென்று, பின்பு இயேசு கிறிஸ்து அவர்கள் மீது செலுத்தும் அன்பை அவர்களிடம் தெரிவிப்பதனால், பாவியினிடம் காட்டப்படும் அன்பின் மீது இயேசு கிறிஸ்து வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடுகிறீர்களா?

அத்தியாயம் – 8

தேவனை அறிந்து கொள்ளுதல்

இயேசு கிறிஸ்துவினுடைய மதிப்புமிக்க தன்மைகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பாடத்தில், தேவனை அறிந்து கொள்ளு தலுக்கான முக்கியத்துவத்தின்மீது இயேசு வைத்த மதிப்பைப் பற்றி என்னுடன் சேர்ந்து சிந்தியுங்கள். நாம் இயேசுவினுடைய போதனைக்கு சரியான விதத்தில் பதிலளிக்கும் போது ஆவிக்குரிய மற்றும் உறவுமுறை சம்பந்தமான ஒன்று நமக்குள் நிகழ்கிறது.

இயேசு தம்முடைய மூன்று வருட பொது ஊழியத்தை இந்த உலகத்தில் பன்னிரெண்டு மனிதர்களோடு செலவிட்டார். அந்த பன்னிரெண்டு மனிதர்கள் அவரோடு எப்போதும் இருந்தார்கள். அவர் அவர்களுக்குப் போதித்தார், அவர் அவர்களுக்கு எடுத்துக் காட்டினார், அவர் அவர்களை வெளியே அனுப்பினார், அவர் அவர்களுக்குப் பயிற்றுவித்தார். அவர் கைது செய்யப்பட்டு, உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்க வேண்டிய வேளை நெருங்கியதை அவர் அறிந்தபோது, தம்முடைய கடைசி பன்னிரெண்டு மணிநேரங்களை அவர் இந்த பன்னிரெண்டு மனிதர்களோடு செலவிட்டார் (யோவான் 13 - 16).

அவர்கள் ஒன்றாக செலவிட்ட நேரத்தில், அவர் இனி நடக்க விருக்கும் காரியங்களைப்பற்றி இதுவரை பேசியிராத அளவிற்கு விரிவாகப் பேசினார். அவர் குறிப்பாக ‘‘நான் உங்களை விட்டு செல்லப் போகிறேன்! ஆனால் உங்களை அனாதைகளைப் போல கைவிட்டுவிடப் போவதில்லை. அந்த அற்புதத்தின் விளைவாக, கடந்த மூன்று வருடகாலமாக நாம் அனுபவித்த நெருக்கமான உறவு முறையைக்

காட்டிலும் அதிகமான நெருக்கத்தை நாம் பெறப்போகிறோம் என்று கூறி அவர்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கினார்''.

அவர் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவருக்கு அவர் பயன்படுத்தின கிரேக்க வார்த்தை ''Paraclete''என்பதாகும். அது வேதாகமத்தின் பல மொழி பெயர்ப்புகளில் ''தேற்றரவாளன்'' என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. ''Paraclete'' என்றால் ''நமக்கு ஆதரவாக வந்து, நமக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு நம்முடன் தம்மை இணைத்துக் கொள்ளும் ஒருவர்'' என்று பொருள்.

இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுடன் செலவிட்ட அந்த நெருக்கமான சூழலில், இவ்வாறு போதித்தார்: ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், எனக்குக் கீழ்ப்படியுங்கள்; (பின்பு) நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது.... வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.... அவர் பரிசுத்த ஆவியானவர்'' (யோவான் 14 : 15 - 17). அப்போஸ்தலனாகிய யூதா அவரை நோக்கி, ''நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன?'' என்று கேட்டான். அவர் இக்கேள்விக்கு பதிலாக, ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம், என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ளமாட்டான்'' (யோவான் 14 : 22 - 24) என்றார்.

அவருடைய போதனைக்குக் கீழ்ப்படிவது, அவருடனும், பிதாவுடனும், பரிசுத்த ஆவியாகிய தேற்றரளவானனுடனும் நமக்கு ஓர் உறவுமுறையை ஏற்படுத்துகிறது. பரிசுத்த ஆவியின் மூலமாகவும், அவருடைய போதனைக்குக் கீழ்ப்படிவதன் மூலமாகவும் சாத்தியமாகிற இந்தப் புதிய உறவுமுறை, பூமியில் தம்முடைய மூன்று வருட பொது ஊழியத்தில் அப்போஸ்தலர்களுடன் அவர் கொண்டிருந்த உறவுமுறையைக் காட்டிலும் அதிக நெருக்கமானதாக இருக்கும் என்று அவர் விளக்குகிறார். பரிசுத்த ஆவியின் மூலமாகவும், இயேசுவினுடைய போதனைக்குக் கீழ்ப்படிவதன் மூலமாகவும் நமக்கு தேவனுடன் கிடைக்கிற நேரான உறவுமுறையின் மீதான மதிப்புமிக்க தன்மையைப் பற்றிய ஒரு ஊக்கமளிக்கும் உட்கருத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

அவர் இன்னும் ஒரு படி முன்பாக சென்று, ''உண்மையில், இந்தப் புதிதான ஏற்பாடு செயல்படுத்தப்படும்போது, நான் செய்ததைக் காட்டிலும் பெரிதான கிரியைகளை நீங்கள் செய்யப் போகிறீர்கள்'' (யோவான் 14 : 12). அது எத்தகைய ஒரு சவால்! அவர் பெரிதான கிரியைகளின் தன்மையைப் பற்றிக் கூறாமல், அவற்றின் எண்ணிக்கை யைப் பற்றி கூறினார் என்று நான் எப்போதும் உணர்ந்திருக்கிறேன், ஏனென்றால் அவற்றின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும், அவை உலகம் முழுவதிலும் நிறைவேற்றப்படும். பரிசுத்த ஆவியானவரும் இயேசு கிறிஸ்துவும், பிதாவும் அவர்களுக்குள் வாசமாயிருக்க, ஆவியான வரால் கட்டுப்படுத்தப்பட்டு, ஆவியானவரால் நிரப்பப்பட்ட ஒரு விசுவாசி இருக்கும் இடத்தில், தேவனால் பெரிய, இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியைகளைச் செய்ய முடியும்.

சுருக்கம்

கிறிஸ்துவினுடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவது, பரிசுத்த ஆவியானவரோடும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடும், பிதாவாகிய தேவனோடும் ஒரு உறவுமுறையைப் பெற்று, அதைக் காத்துக் கொள்வதற்கான ஒரே வழியாகும். நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் ஆற்றலுடன் செயல்படுவதற்கு நம்முடைய கீழ்ப்படிதல் வழிவகுக்கிறது. ''அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு அவர் தம்முடைய பரிசுத்த ஆவியைத் தருகிறார்'' என்று பேதுரு கூறியபோது அவன் இந்த மதிப்புமிக்க தன்மையை வலியுறுத்தினான். பெந்தெகொஸ்தே நாளின் அற்புதங்கள் அனைத்தையும் பேதுரு அனுபவித்துக் கொண்டிருந்த போது, அந்த அற்புதமான நாளின் அனைத்து அடையாளங்களுக்கும் அற்புதங்களுக்கும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே காரணம் என்றும் விளக்கினான் (அப்போஸ்தலர் 5:32; 2:33). இயேசுவினுடைய போதனை களையும் புரிந்து கொண்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிதலின் மீதும், தேவனை அறிந்து கொள்ளுதலின் மீதும் ஒரு மிகப் பெரிய மதிப்பை ஏற்படுத்த வில்லையா?

செயல்படுத்துதல்

நம்முடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய உண்மைத் தன்மை இல்லையென்றாலும், நாம் அதை உண்மையுடன் வாஞ்சித்தால், இயேசு கிறிஸ்துவினுடைய போதனைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய மதிப்பு மிக்கத் தன்மையை அறிக்கையிட வேண்டும். ஆவிக்குரிய உறவு

முறையின் வாழ்க்கை உங்களுக்குள்ளாக உண்மையாகவே உருவாக வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியென்றால் இயேசு வினுடைய போதனைகளை அறிந்து, அவை என்ன கூறுகின்றன, அவற்றின் பொருள் என்ன, அவற்றின்படி நீங்கள் வாழும்போது நடப்பது என்ன என்பவைகளை உங்களுக்கு எடுத்துக் காட்டும்படி பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள்.

இயேசு தம்முடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவதன்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடுங்கள், இதன் பொருள் அவருடைய மதிப்புமிக்க தன்மைகளைப் புரிந்து கொள்ளுதல், மனப்பாடம் செய்தல் அல்லது போதித்தல் மட்டுமல்ல. அவருடைய மதிப்புமிக்க தன்மைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவற்றைப் பயன்படுத்தி, நடைமுறையில் செயல்படுத்தி, அவற்றை உங்களுடைய மதிப்புமிக்க தன்மைகளாக மாற்ற வேண்டும் என்று கூறுகிறேன். இயேசு கூறியபடி, இது உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவரோடும், உயிர்த்தெழுந்த ஜீவிக்கிற கிறிஸ்துவுடனும், பிதாவாகிய தேவனோடும் ஓர் உறவுமுறையை ஏற்படுத்தும், பின்பு, பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் உறவு கொண்டு, உங்கள் மூலமாக தங்களுடைய கிரியையை நடப்பிப்பார்கள்.

அத்தியாயம் – 9

பேதுரு எனப்பட்ட ஒரு மனிதன்

இயேசு கிறிஸ்துவினுடைய மதிப்புமிக்க தன்மைகளைப் பற்றிய மற்றொரு பாடத்திற்கு உங்களை வரவேற்கிறேன். இயேசு ‘‘பேதுரு’’ என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதனின்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையைப் பற்றி இந்த பாடத்தில் என்னோடு சேர்ந்து தியானியுங்கள்.

இயேசு பேதுருவைச் சந்தித்தபோது, அவனுடைய பெயர் சீமோன் என்று இருந்தது. சீமோன் இயேசுவைச் சந்தித்த போது, அவனுடைய குணாதிசயத்தில் மேலோங்கி நின்ற ஒரு காரியம் அதன் உறுதியற்ற தன்மையேயாகும். ‘‘...அவருக்குப் பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான். .....பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டு வந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்கு பேதுரு என்று அர்த்தமாம்’’ என்று வேதாகமம் கூறுகிறது.

இயேசு பேதுருவை உற்று நோக்கி, அவனை ஒரு கல் என்று அழைத்தபோது அவர் நமக்காக ஒரு பெரிய உதாரணத்தை ஏற்படுத்தினார். பேதுரு ஒரு கல்லைப் போல் உறுதியுள்ளவனாக இருந்தானா? இல்லை, அந்த வேளையில் அவன் அவ்வாறு இல்லை. ஆனால் இயேசு அவன் இருந்தவண்ணமாக மட்டும் அவனைப் பார்க்கவில்லை; அவன் இருக்கப்போகிற விதத்தில் அவனைப் பார்த்தார். உங்களுடைய பிள்ளைகளுடன் ஒரு உறவுமுறையைக் கட்டுவதில் இந்த அணுகுமுறையை முயற்சித்துப் பாருங்கள், உங்களுடைய வாழ்க்கைத் துணையிடம் இதை முயற்சித்துப் பாருங்கள். உங்களுடன் வேலை

செய்பவர்களிடத்தில் அல்லது உங்களுக்காக வேலை செய்பவர் களிடத்தில் இதை முயற்சித்துப் பாருங்கள் - ஒரு உறவுமுறையை நீங்கள் கட்டுவதற்கு முயற்சிக்கும் எவரிடத்திலும் இதை முயற்சி செய்து பாருங்கள். அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அவ்வாறாக இருப்பதற்கான ஆற்றல் அவர்களிடத்தில் உண்டு என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்று அவர்களுக்குத் தெரியப்படுத்த முயற்சி செய்யுங்கள். ஒரு நபரின்மீது ஆக்கபூர்வமாக செயலாற்றும் ஆற்றலின் மதிப்புமிக்க தன்மையை வைப்பது, அந்த நபரின் மீது நீங்கள் கொண்டிருக்கும் அன்பின் வெளிப்பாடாகும். அந்த விதமான அன்பு அவர்களை ஊக்குவிக்கக் கூடியதாகவும் அவர்களால் மறுக்க முடியாததாகவும் இருக்கிறது. அன்பு ''.....சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும் சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது'' என்று பவுல் நமக்குக் கூறியபோது அவர் இதையே வலியுறுத்தினார்.

கர்த்தராகிய இயேசு அப்போஸ்தலர்களிடம், ''நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?'' என்ற கேள்வியைக் கேட்டபோது, பேதுருவுட னான அவருடைய உறவுமுறையின் மற்றொரு அத்தியாயத்தை நாம் பார்க்கிறோம். பேதுரு இக்கேள்விக்கான சரியான பதிலைக் கூறினான் - ''நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து.'' அதற்குப் பதிலாக இயேசு, ''பேதுருவே, நீ அந்த அளவிற்கு புத்திமானல்ல. பரலோகத்திலிருக்கிற என்னுடைய பிதா அதை உனக்கு வெளிப்படுத்தினார்'' என்று குறிப்பாக கூறினார் (மத்தேயு 16 : 16,17).

இயேசு தொடர்ந்து தம்முடைய சபையை பேதுரு என்ற கல்லின் மீது கட்டப் போவதாக அவர் கூறினார். பேதுருவைப் போன்ற ஒரு மனிதன் ஒரு வெளிப்பாட்டைப் பெற முடியும் என்ற அற்புதத்தின் மீது அவருடைய சபை கட்டப்படப் போகிறது என்று இயேசு கூறியதாக நான் நம்புகிறேன். வேறு வார்த்தைகளில் கூறினால், தேவனால் சாதாரண மக்கள் மூலமாக அசாதாரணமான காரியங்களைச் செய்ய முடியும், ஏனென்றால் அவர்கள் அவரால் பயன்படுத்தப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். இந்த அற்புதத்தின் மீது இயேசு தம்முடைய சபையைக் கட்டுவதற்குத் தீர்மானித்தார். இயேசுவுக்கும், பேதுருவுக்குமிடையே இருந்த உறவு முறையைப் பற்றி சுவிசேஷங்கள் விவரிக்கின்ற இடங்கள் அனைத்திலும், இயேசு பேதுருவினிடம், ''பேதுருவே, உன்னால் செய்ய முடியும். என்னுடைய உதவியினால்,

உன்னால் செய்ய முடியும்'' என்று தொடர்ச்சியாக அவனுக்கு உறுதிப்படுத்தி, மீண்டும், மீண்டும் தம்முடைய அன்பை வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

அவர்கள் ஒன்றாக இணைந்திருந்த காலங்கள் முடிவை நெருங்கிய போது, அனைத்து அப்போஸ்தலர்களும் அவரைக் கைவிட்டு, அன்று இரவு விடிவதற்குள் ஓடப்போகிறார்களென்றும், பேதுருவோ மறுதலிப்பின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறான் என்றும் அவர் அறிந்திருந்தார். இங்கு கர்த்தராகிய இயேசுவின் இந்த அழகான வார்த்தைகளைக் காண்கிறோம். இயேசு இந்த வார்த்தைகளை பேதுருவினிடம் கூறியபோது, அவருடைய கண்களில் அவன் அன்பைப் பார்த்திருக்க முடியும் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்: ''சீமோனே, சீமோனே, இதோ, கோதுமை யைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக் கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு (என்னிடம் திரும்பியபின்பு) உன் சகோதரரை ஸ்திரப்படுத்து'' (லூக்கா 22: 31,32) என்றார்.

நீங்கள் நான்கு சுவிசேஷங்களையும் பொருத்திப் பார்க்கும்போது, பேதுரு அப்போதுதான், ''காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன்'' என்று இயேசுவிடம் கூறினான் என்பதை உணருவீர்கள். இயேசு அதற்குப் பதிலாக பேதுருவை அன்புடன் நோக்கி, ''பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை (கூட) மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என்று கூறினார். இயேசுவினுடைய இந்த வார்ததைகள் ஒரு தீர்க்கதரிசனம் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்; பேதுரு அந்த தீர்க்கதரிசனத்தை ஒரு எழுத்துக்கூடப் பிசகாமல் நிறைவேற்றினான். பேதுரு இயேசுவை மூன்றாம் முறையாக மறுதலித்தபோது, உடனடி யாக சேவல் கூவிற்று, பின்பு இயேசு ரோம போர்ச்சேவகர்களால் அவமானப்படுத்தப்பட்டவராக வெளிப்பட்டார்; அப்போது பேதுரு வினுடைய கண்களும், இயேசுவினுடைய கண்களும் ஒன்றையொன்று சந்தித்தன என்று லூக்கா நமக்குக் கூறுகிறார். பேதுரு இருட்டிற்குள் வெளியே சென்று, மனங்கசந்து அழுததில் வியப்பில்லை (லூக்கா 22: 33-34, 61-62).

மறுதலித்தவனை உருவாக்குதல்

மறுதலித்த இந்தக் கடுமையான அனுபவத்திற்குப் பிறகு, இயேசுவுக்கும், பேதுருவுக்குமிடையே இருந்த உறவுமுறையின் மற்றொரு அத்தியாயத்தை யோவான் விவரிக்கிறார் (யோவான் 21). இயேசு சிலுவையிலறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார். பேதுரு தன்னுடைய மீன் பிடிக்கும் தொழிலுக்கு திரும்பியிருக்கக் கூடும் என்பது போல தோன்றுகிறது. இந்த நேரத்தில், அப்போஸ்தலர்கள் அனுபவித்த அதைரியத்தையும், மருட்சியையும் கற்பனை செய்து பாருங்கள். பேதுரு தன்னுடைய ஆண்டவரை மூன்று முறை மறுதலித்த தற்காக அவன் அனுபவித்துக் கொண்டிருந்த கடுமையான குற்றமனச் சாட்சியையும் கற்பனை செய்து பாருங்கள்.

கர்த்தர் பேதுருவுக்கும், அவனுடன் சேர்ந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களுக்கும் தரிசனமானார். மேல் வீட்டறையில் பேதுரு தன்னுடைய கர்த்தரை தான் ஒருபோதும் மறுதலிப்பதில்லை என்று வீம்புடன் கூறியபோது அங்கிருந்தவர்களில் ஏழு பேரின் முன்னிலை யிலே, இப்போது இயேசு பேதுருவினிடம் மூன்று மிகக் கடினமான கேள்விகளைக் கேட்கிறார். இந்த மற்ற மனிதர்களின் மத்தியில், இயேசுவுக்கும், பேதுருவுக்குமிடையே ஓர் ஆர்வமூட்டும் உரையாடல் நடைபெறுகிறது. இந்த உரையாடலின் ஒரு சுருக்கமான விளக்கவுரை:

அவர்கள் காலை உணவைச் சாப்பிட்டு முடித்த பிறகு, இயேசு பேதுருவை நோக்கி, ''பேதுருவே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?'' என்று கேட்டார். இயேசு இந்தக் கேள்வியைக் கேட்ட போது, அவர் அகப்பே (agape) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். ''அகப்பே'' என்றால் பவுல் I கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் விவரிக்கும் முழுமையான நிறைவான அன்பு - அது உண்மையானது. இக்கேள்விக்கு பேதுரு பதிலளிக்கையில் அவன் அன்பிற்கு ஒரு வேறுபட்ட வார்த்தையான ''பிலியோ'' (phileo) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினான். பேதுரு கூறிய பதிலின் சாராம்சம்: ''கர்த்தாவே, அந்தக் கேள்விக்கான பதிலை நீர் அறிந்திருக்கிறீர். நான் உம்முடைய நண்பன் மட்டுமே என்பதை நீர் அறிவீர். நீர் என்னுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர். நான் உம்மை நேசிக்கிறேன் (phileo) என்பதை நீர் அறிந்திருக்கிறீர்.'' பேதுரு பயன்படுத்திய அந்த வார்த்தை முழுமையானதும், உண்மையானதும், தேவனிடத்திலிருந்து வந்ததும், ஒரு முழுமையான அர்ப்பணிப்பில் முடிவடைவதுமான அன்பைக் குறிப்பிடவில்லை.

பேதுரு நேர்மையுடன் பதிலளித்தான். அவன் இப்போது வீம்புடன் பேசவில்லை, ஆனால் அறிக்கையிடுகிறான். ''நான் இவர்கள் எல்லாரைக் காட்டிலும் உம்மை அதிகமாக நேசிக்கிறேன்'' என்று பேதுரு கூறவில்லை. அந்தக் கேள்வி, ''பேதுருவே, நீ உன்னுடைய முழு இருதயத்தோடு, முழு மனதோடு, முழு ஆத்துமாவோடு, முழு பெலத்தோடு என்னில் அன்பாயி ருக்கிறாயா?'' என்று கர்த்தர் அவனைக் கேட்பது போல இருந்தது. பேதுரு இயேசுவினுடைய இந்தக் கேள்விக்கு ''கர்த்தாவே, இந்தக் கேள்விக்கான பதிலை நீர் அறிந்திருக்கிறீர். என்னுடைய அன்பு நட்புரீதியானது மட்டுமே என்பதை நீர் அறிவீர்'' என்று பதிலளித்தான்.

பேதுரு இப்போது பெருமையுடன் பேசவில்லை. பேதுரு உடைக்கப்பட்டிருக்கிறான். பேதுரு ஆவியில் தொய்ந்து போனவனாக இருந்தான். ஆனால் இயேசுவுக்கும், பேதுருவுக்கும் இடையே நடந்த இந்த ஆழமான உரையாடலைப்பற்றிய வியப்பூட்டும் காரியத்தை உங்களுக்குக் கூறவிரும்புகிறேன். பேதுருவினுடைய அன்பு வெறும் நட்பு மட்டுமே என்று அவன் கர்த்தரிடம் அறிக்கையிட்டபோது, அவர், ''பேதுருவே, என் ஆடுகளை மேய்ப்பாயாக. என்னுடைய ஆடுகளை மேய்ப்பதற்கு வாழ்க் கையில் தவறு என்பது என்றால் என்ன என்பதை அறிந்த உன்னைப் போன்ற ஒருவன் தான் எனக்குத் தேவை. ஒரு பரிபூரணமான மனிதன் என் ஆடுகளிடம் முடியாத காரியங்களை எதிர்பார்ப்பான். அதில் எனக்கு விருப்பமில்லை. எனக்கு ஒரு உடைக்கப்பட்ட மனிதன் வேண்டும். எனக்கு ஒரு தாழ்மையான மனிதன் வேண்டும். தோல்விகளைச் சந்திக்கும் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் ஒரு இரக்கமுள்ள, ஆதரவளிக்கும் மனிதன் எனக்கு வேண்டும். பேதுருவே, என்னுடைய ஆடுகளை உன்னைப் போன்ற ஒருவன் மேய்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்'' என்று கூறினார்.

கர்த்தர் இரண்டாம் முறையாக பேதுருவினிடம், ''பேதுருவே, நீ என்னை உண்மையில் நேசிக்கிறாயா?'' என்று கேட்டார். அவர் மீண்டுமாக ''அகப்பே'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். பேதுரு மீண்டுமாக ''பிலியோ'' என்ற வார்த்தையினால் பதிலளிக்கிறான். பேதுரு தன்னுடைய பதிலில், ''அந்தக் கேள்விக்கான பதிலை நீர் அறிந்திருக்கிறீர். நான் உம்முடைய நண்பன் மட்டுமே என்பதை நீர் அறிவீர்'' என்று கூறுகிறான். இந்த முறை கர்த்தராகிய இயேசு, ''பேதுருவே, என்னுடைய ஆடுகளை மேய்ப்பாயாக'', என்று கூறுகிறார். இயேசு தம்முடைய பதிலில், ''பேதுருவே, என் ஆடுகளை மேய்ப்பாயாக. என்னுடைய ஆடுகளை உன்னைப் போன்ற ஒருவன் பராமரிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்'' என்று கூறினார்.

பின்பு மூன்றாம் முறையாக கர்த்தர் பேதுருவிடம், ''பேதுருவே, நீ என்னில் அன்பாயிருக்கிறாயா?'' என்று கேட்டார். இந்த முறை இயேசு, ''பிலியோ'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அது இயேசு சீமோனிடம், ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ குறைந்தது என்னுடைய நண்பனாகவாவது என்னை நேசிக்கிறாயா?'' என்று கேட்பது போல இருந்தது. ''பேதுருவே, உன்னுடைய அன்பு ஒரு சாதாரண நட்பிற்கு சமமாகுமா? அந்த அளவு அன்பாகிலும் உனக்கு என்னிடம் உண்டா?'' என்று அவர் கேட்கிறார்.

கர்த்தர் அந்தக் கேள்வியை மூன்றாம் முறையாகக் கேட்ட விதத்தின் காரணமாக பேதுரு துயரமடைந்தான். பேதுரு இயேசுவிடம், ''கர்த்தாவே, நீர் என்னுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். நான் உம்மை அந்த அளவாகிலும் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிந்திருக்கிறீர்'' என்று பதிலளித்தபோது அவனுடைய குரல் துயரத்தினால் தழுதழுத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். மூன்றாம் முறையாக, பேதுரு தன்னுடைய அன்பின் குறைவை அறிக்கையிட்டபோது, இயேசு இந்த உடைக்கப்பட்ட, தாழ்மையுள்ள மனிதனைப் பார்த்து, ''பேதுருவே, என் ஆடுகளை மேய்ப்பாயாக'' என்கிறார். இந்த உரையாடலில் நாம் சந்திக்கும் பேதுரு ஒரு உடைக்கப் பட்ட, தாழ்மையுள்ள பேதுரு.

செயல்படுத்துதல்

இது புதிய ஏற்பாட்டிலுள்ள மிக அழகான வேத பகுதிகளில் ஒன்று. புதிய ஏற்பாட்டு சபையின் இந்த உடைக்கப்பட்ட, தாழ்மையுள்ள தலைவனிடம் கர்த்தர், ''பேதுருவே, உன்னைப் போன்ற ஒருவன் என்னுடைய ஆடுகளை மேய்ப்பதை நான் விரும்புகிறேன்'' என்று கூறுகிறார். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பேதுருவின் மூலமாக ஏன் பொழிந்தருளினார் என்று நீங்கள் எப்போதாகிலும் வியந்ததுண்டா? அது ஏன் அன்பின் அப்போஸ்தலர்களான யோவானாக இருந்திருக்கக்கூடாது? இயேசுவைச் சந்தித்தபோது பரிசுத்தமுள்ளவன் என்று பெயர் பெற்ற ஒரே அப்போஸ்தலனான நாத்தான்வேலாக ஏன் இருந்திருக்கக்கூடாது? இயேசுவினால் ''இடிமுழக்கத்தின் மகன்'' என்று பெயர் பெற்ற யாக்கோபுவாக ஏன் இருந்திருக்கக்கூடாது?

பேதுரு ஒரு உடைக்கப்பட்ட அப்போஸ்தலனாயிருந்ததால். சபை பிறந்த போது, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சபைக்குள் ஆயிரக் கணக்கானவர்களைக் கொண்டு வந்த செய்திகளைப் பிரசங்கிக்கும்படி

தேவன் பேதுருவைப் பயன்படுத்தினார் என்று நான் நம்புகிறேன், இயேசு மூன்று வருடங்களாக பேதுருவை ஒரு கல் என்று அழைத்தார்; பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு, பேதுரு சபையில் ஒரு கல்லைப் போன்ற தலைவனாக இருந்தான்.

சபையின் உன்னத மேய்ப்பர் தம்முடைய சபையை, பேதுரு என்ற ஒரு கல்லின்மீது கட்டப் போவதாக அளித்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காக தோல்வியுற்ற பேதுருவை பயன்படுத்தினார் என்ற உண்மை எனக்கு வியப்பூட்டுகிறது. கிறிஸ்துவின் சபை கன்மலையாகிய அவரின்மீது கட்டப்பட்டிருக்கிறது என்று பேதுரு நமக்குக் கூறுகிறார் (1 பேதுரு 2:4 - 6). நான் முன்னதாக விளக்கமளித்தது போல, இயேசு பேதுருவைக் குறித்த அந்த தீர்க்கதரிசனத்தை உரைத்தபோது அவர் குறிப்பிட்ட கல் என்னவென்றால், கிறிஸ்து, பேதுருவைப் போன்ற சாதாரண மக்களை, அசாதாரண, இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங் களுக்கு வாய்க்காலாகப் பயன்படுத்த முடியும் என்ற அற்புதமேயாகும்.

தங்களை பூரணமடைந்தவர்களாக எண்ணிக் கொள்பவர்கள் தம்மு டைய ஆடுகளை மேய்ப்பதை அவர் விரும்பவில்லை. அவருடைய ஆடுகளை அறிந்து கொள்ளும் தாழ்மையுள்ள, உடைக்கப்பட்ட, இரக்கமுள்ள மக்கள் மேய்ப்பதையே அவர் விரும்புகிறார். எனவே தான், இயேசுவை நாம் பின்பற்றும்போது நமக்கு நேரிடும் அனைத்துக் காரியங்களும் - நம்முடைய தோல்விகளும்கூட - அவருடைய ஆடுகளை நாம் நேசித்து, பராமரித்து, மேய்ப்பதற்காக நம்மை ஆயத்தப்படுத்தும் ஒரு ''கல்விக் கூடத்தின்'' ஒரு பகுதியாக மாறுகின்றன.

நீங்கள் தோல்வியைச் சந்தித்ததுண்டா? உங்களுடைய தோல்வியில் ஆக்கபூர்வமாக உதவி செய்யும் ஆற்றலுடன் எவராவது உங்களுக்கு மதிப்பளித்ததுண்டா? அப்படியென்றால், நீங்கள் நம்பிக்கையற்றவர்களாக, உங்களை நீங்களே நம்ப முடியாத சூழ்நிலையில் இருக்கும் போது கூட, உங்களுக்கு சிறந்த காரியங்கள் நடக்க வேண்டும் என்று நம்புகின்ற ஒருவரால் நீங்கள் மதிக்கப்படுவது என்றால் என்ன என்று நீங்கள் அறிவீர்கள். இறுதியாக, தோல்வியடைந்தவர்களிடம் அல்லது இதுவரை எதிலும் வெற்றி யடைந்திராத இளைஞர்களிடம் ஆக்கபூர்வமாக செயலாற்றும் ஆற்றலுடன் அன்பு கூருவதன் மூலம் இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? தங்களுடைய உறுதியற்ற தன்மைக்கு பேர்போன ஒருவரை நீங்கள் ஒரு கல் என்று அழைக்கிறீர்களா?

அத்தியாயம் – 10

நியாயப்பிரமாணத்தின் ஆவி

ஒரு நாள், இயேசுவினிடம் ஒரு கடினமான கேள்வி ஒன்றைக் கேட்டனா் என்று சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம்:

''அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்'' (மத்தேயு 22:35 - 40).

இயேசு இந்த இரண்டு கற்பனைகளில் பழைய ஏற்பாடு முழுவதையும் சுருக்கிக் கூறினார்; தேவனை நேசிக்க வேண்டும்; உன்னுடைய அயலானை உன்னைப் போல நேசிக்க வேண்டும். இந்த இரண்டு சுருக்கப்பட்ட கற்பனைகள் நாம் அன்புகூரவேண்டுமென்று நமக்குக் கட்டளையிடுகின்றன, ஏனென்றால் அன்பு கட்டளைகளின் ஆவியாக இருக்கிறது; தேவனுடைய இருதயத்திலிருந்த அன்பே தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் பிறப்பித்தது.

இயேசுவுக்கும் சமயத்திற்குமிடையே உள்ள அடிப்படையான வேறுபாடு

இயேசுவினுடைய போதனைக்கும், சதுசேயா் பரிசேயர்களின் போதனைகளுக்கும் இடையே ஒரு அடிப்படையான வேறுபாடு காணப்பட்டது.

அந்த வேறுபாடு மாற்கு எழுதின சுவிசேஷத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற ஒரு சம்பவத்தின்மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

''அவா் ஓய்வு நாளில் பயிர் வழியே போனார்; அவருடைய சீஷர்கள் கூட நடந்து போகையில், கதிர்களைக் கொய்யத் தொடங்கினார்கள். பரிசேயர் அவரை நோக்கி: இதோ, ஓய்வு நாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள் என்றார்கள். அதற்கு அவர்: தாவீதுக்கு உண்டான ஆபத்தில், தானும் தன்னோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது, அவன் அபியத்தார் என்றும் பிரதான ஆசாரியன் காலத்தில் செய்ததை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தெய்வசமுகத்து அப்பங்களைத் தானும் புசித்துத் தன்னோடிருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்றார். பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது'' (மாற்கு 2:23 - 27) என்றார்.

தேவனுடைய நியாயப்பிரமாணம் தேவனுடைய அன்பின் இருதயத்தை வெளிப்படுத்துகிறது என்ற அடிப்படைக் கருத்தை இயேசு முரண்பாடற்ற முறையில் எடுத்துக் கூறினார். தேவன் இந்தக் கட்டளைகளை பிரமாணமாக்கினார், ஏனென்றால் அவர் தாம் படைத்த மக்களை நேசித்தார். மனிதன் இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் அவனுக்கு நல்லது என்று தேவன் அறிந்திருந்தார்.

ஆனால் பரிசேயர்களும் சதுசேயர்களும் அந்த அடிப்படைக் கருத்தை காணத் தவறினார்கள். அவர்கள் தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியினால் மரிப்பதைப் பற்றி கவலைப்படவில்லை, ஏனென்றால் அந்த அப்பத்தை பிரதான ஆசாரியன் மட்டுமே சாப்பிட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியது. சதுசேயர்களும் பரிசேயர்களும் அன்பில்லாமல் நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு எழுத்தையும் பின்பற்றினார்கள். அந்தக் கட்டளைகள் அனைத்தும் மனிதனுக்காக உருவாக்கப்பட்டன, ஏனென்றால் தேவன் மனிதனை நேசித்தார் என்ற உண்மையை அவர்கள் காணத்தவறினார்கள். என்றாலும், இயேசு, ''அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறது. எனவே உங்கள் முழு இருதயத்தோடு தேவனை நேசியுங்கள்; உங்களை நேசிப்பது

போல உங்கள் அயலானை நேசியுங்கள்; இப்படிச் செய்வதினால் நீங்கள் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவீர்கள்'' என்று கூறினார்.

அன்பு என்னும் பட்டகம் (PRISM)

இயேசுவுக்கும், மதப்பிரகாரமான அமைப்பிற்குமிடையே இருந்த வேறுபாட்டை இந்த முறையில் நாம் சுருக்கிக் கூற முடியும்: இயேசு தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மக்களுடைய வாழ்க்கைக்குள் புகுத்துவதற்கு முன்பாக, தேவனுடைய நியாயப்பிரமாணத்தை தேவனுடைய அன்பு என்னும் ''பட்டகத்தின் வழியாக'' செலுத்தினார். பரிசேயர்களும் சதுசேயர்களும் தேவனுடைய அன்பைப் பக்க வழியாகக் கடந்து சென்று, சட்டப் பிரகாரமாகவும், இரக்கமற்ற முறையிலும் மக்களிடம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் புகுத்தினார்கள். பின்பு, புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு செய்ததை ''நியாயப்பிரமாணத்தின் ஆவி'' என்றும், பரிசேயர்கள் செய்ததை ''நியாயப் பிரமாணத்தின் எழுத்து'' என்றும் அழைத்தார் (II கொரிந்தியர் 3:6).

அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிற உயிர் நிலையாகவும், அடிப்படைக் கருத்தாகவும், நியாயப்பிரமாணத்தை பூரணப்படுத்தும் ஆவியாகவும் இருக்கிறது என்பதை இயேசு எடுத்துக் காட்டியதன் மூலம் அவர் அன்பிற்கு மிக அதிகமாக மதிப்பளித்தார். தம்மைப்பின்பற்று கிறவர்கள் நியாயப்பிரமாணத்தினிடம் தம்முடைய அணுகுமுறையைப் புரிந்து கொண்டால், சதுசேயர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியைக் காட்டிலும் அவர்களுடைய நீதி அதிகமாயிருக்கும் என்று இயேசு அவர்களிடம் கூறினார்.

சுருக்கமும், செயல்படுத்துதலும்

இந்தப் பாடம் முழுவதிலும் நான் கேட்டுக் கொண்டிருந்த கேள்வியை இப்போது உங்களிடம் கேட்கிறேன்: நியாயப்பிரமாணத்தின் ஆவியின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? நீங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மக்களுடைய வாழ்க்கையில் புகுத்தும்போது, தேவனுடைய அன்பிற்கு அப்பாற்பட்டிருக்கும் ஒரு வழியைத் தெரிந்துகொண்டு, தேவனுடைய நியாயப்பிரமாணத்தைச் சட்டப்பிரகாரமாகப் பயன்படுத்துகிறீர்களா? ஒரு பரிசேயனைப் போல, ஒரு மனிதனுடைய பசிக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லியும், அவனைத் தொடர்ந்து பசியில் வாடவிடும் வகையில் நீங்கள்

நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்துகிறீர்களா? அல்லது நீங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மக்களுடைய வாழ்க்கையில் புகுத்துவதற்கு முன்பாக அதை தேவனுடைய அன்பு என்னும் ''பட்டகத்தின்'' வழியாக செலுத்துகிறீர்களா? நியாயப் பிரமாணத்தின் ஆவியின்மீது கிறிஸ்து வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் இந்த முறையில் அறிக்கையிட வேண்டும்.

அத்தியாயம் – 11

ஒரு பாவியின் ஜெபம்

நாம் இயேசு கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகளைக் குறித்து கற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த அத்தியாயத்தில், ஒரு பாவியினுடைய ஜெபத்தின்மீது அவர் வைத்த மதிப்புமிக்கத் தன்மையைப்பற்றி ஆராய்வோம். இயேசு தம்முடைய அழகான உவமைகளுள் ஒன்றில், ஒரு பாவியினுடைய ஜெபத்திற்கு எவ்வளவு அதிகமாக மதிப்பளிக்கிறார் என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகிறார். உவமை என்ற வார்த்தை மூல பாஷையில் ''பாரா'' (para) மற்றும் ''பல்லோ'' (ballo) என்ற இரண்டு வார்த்தைகளை இணைக்கும் ஒரு கூட்டு வார்த்தையாகும். முதலாம் வார்த்தையின் பொருள் ''ஒரு பொருளின் பக்கமாக'' என்பதாகும்; இரண்டாம் வார்த்தையின் பொருள் ''எறிதல்'' என்பதாகும். ஒரு போதகர் அவர் போதிக்க விரும்பும் ஒரு சத்தியத்தின் பக்கமாக எறியும் ஒரு கதை ஒரு உவமை எனப்படும். இயேசு உவமைகளைக் கூறுவதில் வல்லுநர். பின்வரும் கதையில், ஒரு பாவியினுடைய ஜெபத்தின் மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மைக்குப் பக்கமாக அவர் ஒரு கதையைக் கூறுகிறார். இரட்சிப்பிற்காக தங்களுடைய சுயநீதியை நம்பி, மற்றவர்களை அற்பமாகக் கருதிய மக்களுக்காக இயேசு இந்த உவமையைப் போதித்த தாக நமக்கு சொல்லப்படுகிறது:

''இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன், பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி

வருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே (இந்த ஆயக்காரன்) நீதிமானாக்கப் பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்'' (லூக்கா 18:9-14).

இயேசுவினுடைய மதிப்புமிக்க தன்மைகளை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அவர் இரண்டு மனிதர்களையும், இரண்டு ஜெபங் களையும், ஜெபம் பண்ணும்போது சரீரத்தின் இரண்டு தோற்ற நிலைகள் என்று நாம் அழைக்கக் கூடியதையும் பற்றி கூறுகிறார். இயேசு இந்த இரண்டு மனிதர்களில் ஒருவனுடைய ஜெபத்தின் மீதும் தோற்றத்தின் மீதும் அதிகமான மதிப்பை வைத்து, மற்றவனுடைய ஜெபத்தின் மீதும், தோற்றத்தின் மீதும் குறைவான மதிப்பை வைக்கிறார். இயேசு ஒரு மனிதனை மற்றவனைக் காட்டிலும் அதிக மதிப்புள்ளவனாகத் தீர்மானிக் கிறார். அவர் இந்த இரண்டு மனிதர்களைப்பற்றிய கதையைக் கூறுகிறார், ஏனென்றால் ஒரு பாவியினுடைய ஜெபத்தின் மீது அவர் வைக்கும் மதிப்புமிக்க தன்மையை அறிவிக்க விரும்புகிறார்.

இந்த இரண்டு மனிதர்களில் ஒருவன் ஒரு பரிசேயன், யூதர்களின் கோட்பாட்டைப் பேணிக் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சமயப் பிரகாரமான அமைப்பின் ஒரு அங்கத்தினன். அவர்கள் வாரத்தில் இரண்டு தரம் உபவாசித்து, தசமபாகங்களைச் செலுத்தினார்கள். இதற்காக இயேசு அவர்களைப் பாராட்டினார். அவர்களுடைய நீதி சுயநீதியாக இருந்தது. அவர்கள் கண்டிப்பானவர்களாகவும், சமயப்பிரகாரமான சுய ஒழுக்க முடையவர்களாகவும் இருப்பதின்மூலம் தேவன் விரும்புகிற பிரகாரம் அவர்களால் வாழ முடியும் என்று நம்பினார்கள். அவர்கள் தேவனிட மிருந்து எந்த உதவியையும் பெறாமல் தாங்கள் நீதிமான்களாக முடியும் என்று நினைத்தார்கள்.

இந்த உவமையின் மற்றொரு மனிதன் ஒரு ஆயக்காரன் - தன்னுடைய சகயூதர்களிடமிருந்து ரோமர்களுக்காக வரிகளை வசூலிப் பவன். அவர்கள் குறிப்பாக யூத மக்களால் வெறுக்கப்பட்டார்கள். எனவே தான், சுவிசேஷங்களை எழுதியவர்கள் ஆயக்காரர்களையும் பாவிகளையும்

பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயக்காரர்கள் பாவிகள் அல்ல என்பது அவர்கள் கருத்தல்ல, ஆனால் அவர்கள் மிகவும் இழிவான பாவிகளாக இருந்தபடியால் அவர்களைக் குறிப்பிடுவதற்கு ஒரு விசேஷமான தரப்பிரித்தல் தேவைப்பட்டது.

பரிசேயனுடைய ஜெபம் சுயத்தை மையமாகக் கொண்டிருந்தது, ஏனென்றால் அவன் ஜெபித்த இரண்டு வரிகளில், ''நான்'' என்ற வார்த்தைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தான். ஒரு ஜெபம் என்பது பல பகுதிகளை உள்ளடக்கியுள்ளது, ஆனால் ''ஜெபித்தல்'' என்றால் ''வேண்டிக்கொள்ளுதல்'' என்று பொருள். இந்தப் பரிசேயன் தேவனிடம் எதையும் வேண்டிக்கொள்ளவில்லை. அவன் தேவனிடம் அல்லது ஒரு வேளை அவனுடைய ஜெபத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றவர்களிடம், தான் எத்தனை நல்லவன் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருந்தான், ''அவன் தனக்குள்ளே ஜெபம் பண்ணினான்'' என்று இயேசு வசை மொழியாகக் கூறுகிறார். அவனுடைய ஜெபம் அவனிலிருந்து துவங்கியது, அவனைப் பற்றியதாயிருந்தது, அது அவனிடமிருந்து வேறெங்கும் செல்லவில்லை.

இந்த ஆயக்காரன் தன்னுடைய கண்களை வானத்துக்கு ஏறெடுக்கக்கூட துணியாமலிருந்தான். அவன் தன்னுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டான். பாவத்தைக் குறித்த மனஸ்தாபத்துடன் நீங்கள் ஒரு ஜெபத்தை செய்யும்போது, தேவன் உங்களுடைய ஜெபத்தின்மீது அதிக மதிப்பை வைக்கிறார். இயேசு அந்த ஆயக்காரனைச் சுட்டிக்காட்டி, ''இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான்'' என்று கூறினார். நீதிமானாக்கபபடுதல் என்றால், ''நான் ஒருபோதும் பாவம் செய்யாததைப் போன்ற நீதி'' என்று பொருள். அவன் தன்னுடைய வீட்டிற்குத் திரும்பிப் போனபோது, அவன் மன்னிக்கப்பட்டது மட்டுமல்ல, தண்டிக்கப்படாதது மட்டுமல்ல, அவன் ஒருபோதும் பாவம் செய்யாததைப் போல நீதியுள்ளவனாக்கப்பட்டான்.

செயல்படுத்துதல்

இந்த ஆயக்காரனுடைய ஜெபத்தை நாம் ஒருபோதும் ஜெபித்திராவிட்டால், இயேசு அறிவித்த இந்த மதிப்புமிக்க தன்மையை முக்கியமாக நாம் பயன்படுத்தும் முறை, அந்த ஜெபத்தை ஜெபிப்பதாகும். நாம் அந்த ஜெபத்தை பல வருடங்களுக்கு முன்பாக ஜெபித்திருந்தால், நாம் ஒவ்வொரு முறை பாவம் செய்யும் போதும் அந்த ஜெபத்திற்கு தேவன்

மதிப்பளிக்கிறார். ஆயக்காரனுடைய பாவனை அல்லது தோற்றம் அவனுடைய உள்ளத்திலிருந்த மனஸ்தாபத்தை வெளிப்படுத்தியது; இந்த தோற்றத்தின் பொருள், ''பாவத்திற்காக மிகவும் அதிகமாக மனம் வருந்துதல் '' என்பதாகும். அவன் தேவனிடமிருந்து இரக்கத்தை வேண்டினான். ஆனால் பரிசேயனுடைய நிலை அதுவல்ல. அவன் மனஸ்தாபத்தை வெளிப்படுத்தவில்லை; அவன் தேவனிடமிருந்து எதையும் கேட்கவில்லை. நாம் பாவம் செய்யும் போது தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது, ''நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயம்'' என்ற மதிப்புமிக்க தன்மையை அறிவித்தான் (சங்கீதம் 51:17) என்று தாவீதின் வாழ்க்கையிலிருந்து கண்டு கொள்கிறோம்.

ஒரு பாவி ஜெபிக்கும் மனந்திரும்புதலுக்கான ஜெபத்தின் மீது இயேசு கிறிஸ்து வைக்கும் மதிப்புமிக்க தன்மையை இந்த உவமை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. தங்களுடய பாவத்தை அறிக்கையிட்டு, இயேசுவின் நாமத்தில் தேவனிடம் இரக்கத்தைக் கேட்க மனதுள்ளவர்களுக்கு அவர் மதிப்பளிக்கிறார். நம் ஜெபத்தில் நாம் நம்முடைய பாவத்தை அறிக்கையிடும்போது, காணாமல் போன பாவிகளாகவும், துன்பப்படுகிறவர்களாகவும் இருக்கிற நம்மீது தேவன் வைக்கும் மதிப்புமிக்க தன்மையை நாம் கண்டு கொள்வது மட்டுமல்ல, நம் அனைவருக்காகவும் இவ்வுலகத்திற்கு வந்து அவர் அளித்த இரட்சிப்பையும் நாம் கண்டு கொள்கிறோம்.

நீங்கள் ஒரு பாவியா? நீங்கள் அதை அறிந்திருக்கிறீர்களா? ஒரு மனிதன் தன்னுடைய பாவத்தை அறிக்கையிடுவதற்கு மனதுள்ளவனாக இருக்கும்போது, அவன் மன்னிக்கப்படுகிறான், நீங்கள் வெகு காலத்திற்கு முன்பு, உங்களுடைய பாவத்தை அறிக்கையிட்டிருந்தால், தங்களுடைய பாவங்களை இதுவரை அறிக்கையிடாத பாவிகளுக்கு நீங்கள் மதிப்பளிக்கிறீர்களா? உங்களுடைய வாழ்க்கையில் ஒரு உண்மையான பாவியைச் சந்திக்கும் போது, நீங்கள் இவ்வாறு உணருகிறீர்களா? கிறிஸ்து உங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருந்தால், ஒரு பாவி தன்னுடைய பாவத்தை அறிக்கையிட மனதுள்ளவனாக இருப்பதை நீங்கள் அறியும்போது, உங்களுடைய இருதயம் அன்பினால் பொங்கி வழிந்தால் ஆச்சரியப்படாதீர்கள்.

அத்தியாயம் – 12

இழந்துபோனவர்கள், மனக்காயமடைந்த மக்கள்

இயேசு கிறிஸ்துவினுடைய மதிப்புமிக்க தன்மைகளைப் பற்றிய பாடங்களின் ஒரு தொடருக்கு உங்களை வரவேற்கிறேன். இயேசு கிறிஸ்துவினுடைய மதிப்பீட்டு அமைப்பு என்பது அதன் பொருள். இந்த பாடங்களின் தொடரில், இயேசு தம்மீதும், தேவனுடைய வார்த்தையின் மீதும், உங்களையும், என்னையும் போன்றவர்களின்மீதும் அறிவித்த மதிப்புமிக்க தன்மையை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

பாவத்தில் இழந்துபோன, மனக்காயமடைந்த மக்களின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையின் இந்த சிந்தனையைத் தொடரும் வகையில், நாம் மீண்டுமாக யோவான் எழுதின சுவிசேஷத்தின் நான்காம் அதிகாரத்தினிடமும், சீகாரின் கிணற்றண்டையில் சமாரியப் பெண்ணுடனான இயேசுவின் அற்புதமான சந்திப்பின் உரையாடலிடமும் திரும்புவோம். யோவானுடைய சுவிசேஷத்தின் நான்காம் அதிகாரத்தில் 54 வசனங்கள் உள்ளன; இவற்றில் 42 வசனங்கள் இந்த உரையாடலை விவரிக்கின்றன. எனவே, அனைத்து வசனங்களையும் வாசிப்பதற்கு நமக்கு நேரமில்லை. ஆனால், இந்த உரையாடலை நமக்கு விவரிக்கும் அந்த 42 வசனங்களைப் பற்றிய சில கருத்துகளை அளிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, இயேசுவுக்கும், சமாரியப் பெண்ணுக்குமிடையே நடந்த உரையாடலை நீங்கள் கருத்தில் கொள்ளும்போது, நம்முடைய ஆய்விற்காக, ஒரு இழந்துபோன, துன்பப்படும் நபராக இயேசு அவள்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையைப்பற்றி ஆராய்வோம். இயேசு உரையாடலை முன்குறித்தவராக அதற்கான ஆயத்தங்களைச் செய்யும்

வகையில் யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்குப் போகும் வழியில் சமாரியாவின் வழியாகச் செல்ல வேண்டியிருந்தது என்று நமக்குச் சொல்லப்படுகிறது. நீங்கள் இஸ்ரவேலுக்குச் சென்றிருந்தால் அல்லது இஸ்ரவேலின் தேசப் படத்தை நன்கு அறிந்திருப்பீர்களென்றால், யூதேயா இஸ்ரவேலின் தெற்குப் பகுதியிலும், கலிலேயா வடக்கிலும், இவையிரண்டிற்கும் நடுவில் சமாரியா இருப்பதையும் அறிந்திருப்பீர்கள்.

யூதர்கள் சமாரியர்களிடம் நல்லெண்ணம் கொண்டிராதபடியால், அவர்கள் பிரயாணப்படுகையில், சமாரியாவின் வழியாகச் செல்லக் கூடாது என்பதற்காக பல மைல்கள் சுற்றுவழியாகச் சென்றனர். அவர்கள் சமாரியாவைக் கடந்துகூட செல்ல விரும்பாத அளவிற்கு சமாரியர்களை அவமதித்து, அவர்களுடன் கலவாதிருந்தார்கள். இயேசு கலிலேயாவிற்குப் பிரயாணப்பட்டபோது, அவர் சமாரியாவின் வழியாக செல்வதற்குத் தீர்மானித்தார். அவர் சமாரியாவின் மையப்பகுதியை அடைந்தபோது, மதிய நேரத்தில் ஒரு கிணற்றண்டையில் தம்முடைய பிரயாணத்தை நிறுத்தினார். அவர் பிரயாணத்தினால் களைப்படைந்தவராய், கிணற்றிற்கருகே உட்கார்ந்தார் என்று வாசிக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவை அவருடைய மனிதத் தன்மையின்படி பார்க்கும்போது, நமக்கிருக்கும் உணர்வுகள் அனைத்தையும் அவரும் அறிந்திருந்தார். அவர் களைப்பு என்றால் என்ன என்பதையும், தாகம் என்றால் என்ன என்பதையும் அறிந்திருந்தார். உலகத்தின் அந்தப் பகுதியில் மதிய நேரத்தில் வெப்பத்தினால் ஏற்படக்கூடிய சோர்வு என்றால் என்ன என்பதும் அவருக்குத் தெரியும். அவர் அப்போஸ்தலர்களை உணவு வாங்குவதற்காக அனுப்பினார்; அவர்கள் உணவுடன் திரும்பியபோது, அதை அவர் சாப்பிடவில்லை. இந்தப் பெண்ணை தனிமையில் சந்தித்து உரையாடும் பொருட்டு ஒரு நேரத்தை ஒதுக்க அவர் விரும்பினார் என்பது தெளிவாகிறது என்று நான் நினைக்கிறேன்.

நீங்கள் மக்களுக்கு ஆலோசனையளித்தலில் அல்லது நேரிடைத் தேர்வு செய்தலில் ஈடுபடும்போது, அவர்களைத் தனிமையில் சந்திப்பது மிகவும் முக்கியமானது என்பதை அறிவீர்கள். ஒரு மூன்றாம் நபர் அந்த இடத்தில் இருக்கும்வரை அவர்கள் குறிப்பிட்ட காரியங்களை ஒரு போதும் பகிர்ந்து கொள்ளமாட்டார்கள். அங்கு வேறு ஒரே ஒரு நபர் இருந்தாலும்கூட, உங்களால் திறந்த மனதுடன் பேசமுடியாது. நிச்சயமாக, இயேசு அதை அறிந்திருந்தார்.

ஆனால் முதலாவதாக, இந்தப் பெண்ணிடம் அவருடைய அர்ப்பணிப்பையும், அவளுடன் அவர் செலவிட்ட நேரத்திற்கு அவர் எவ்வளவாக, மதிப்பளித்தார் என்பதையும் கவனியுங்கள். ஒரு யூதனுக்கும், சமாரியனுக்குமிடையே இருந்த வெறுப்பை அவர் புறக்கணித்தார் - குறிப்பாக நற்பெயர் இல்லாத ஒரு சமாரியப் பெண்ணுடன் பேசுவதைப் பற்றி அவர் தவறாக நினைக்கவில்லை. அவர் தம்முடைய களைப்பையும் தாகத்தையும்கூட மறந்தார்; அவளுடன் உரையாடும்போது அங்கு எவரும் இருக்கக்கூடாது என்பதை உறுதிசெய்தார். அவர் இந்தப் பெண்ணிற்கு எவ்வாறு மதிப்பளித்தார் என்பதையும், அவர் அவளிடம் எவ்வாறு உரையாடினார் என்பதையும், நீங்கள் பார்க்க முடியும்.

இயேசு கிறிஸ்துவை முகமுகமாக சந்தித்துப் பேசுவது எவ்வாறு இருக்கும் என்று நான் வியக்கிறேன். அவர் அந்த ஐசுவரியவானை உற்று நோக்கியதைப் போல, உங்களுடைய கண்களை கூர்ந்து நோக்குவது எவ்வாறு இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்; 'இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து...' என்று மாற்கு 10:21 வசனத்தில் வாசிக்கிறோம். இயேசுவினால் நேசிக்கப்படுவதன் உணர்வு எப்படியிருக்கும் என்று நான் வியக்கிறேன். இயேசுவைச் சந்தித்த ஒவ்வொருவரும் தாங்கள் அவரால் நேசிக்கப்பட்டதை அறிந்தார்கள். அவர்கள் அவருடைய அன்பை நன்கு அறிந்திருந்தார்கள் என்றும் நான் நம்புகிறேன். அவர் அவர்களை நிபந்தனையின்றி நேசித்தார் என்ற அழகான உண்மையை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார் என்பது தெளிவாகிறது. சமாரியப் பெண்ணுடனான இந்த சந்திப்பிலும் இது உண்மையானது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இயேசுவினுடைய நேர்காணல் முறை

அவர் அவளிடம் உதவி கேட்பதன்மூலம் தம்முடைய உரையாடைத் துவங்குகிறார். அவர் அவளிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கிறார். ஒருவரிடம் ஒரு நேர்காணும் உரையாடலைத் துவங்குவதற்கான மிக அழகான வழிகளில் ஒன்று, அவர் ஓர் உதவியை நாடுவதாகும். இயேசு தம்முடைய உரையாடலை இந்த முறையில் துவங்கும்போது, அந்தக் கலாச்சாரத்தில் வழக்கத்துக்குமீறிய ஒரு காரியத்தை அவர் செய்தார். ஒரு யூதன் ஒரு சமாரியனுடன், குறிப்பாக ஒரு சமாரியப் பெண்ணுடன் பேசுவது வழக்கத்துக்குமீறிய செயலாகும். அவள் நடத்தியது போன்ற ஒரு குடும்ப வாழ்க்கையையுடைய ஒரு சமாரியப் பெண்ணுடன் பேசுவது

முற்றிலும் கலாச்சாரத்திற்கு எதிரிடையானது. அவளுடைய குடும்ப வாழ்க்கையைப் பற்றிய காரியங்கள் அந்த உரையாடலில் வெளி வருகின்றன; என்றாலும், அந்த உரையாடல் துவங்கிய போதே இயேசு அவை அனைத்தையும் அறிந்திருந்தார்.

அவர் தம்முடைய உரையாடலைத் துவக்கியபோது, இந்தப் பெண்ணின் தாகத்தை எடுத்துக்காட்டுகிறார். முன்னதாக, இயேசு தம்மைப் பற்றி ஒரு மதிப்புமிக்க தன்மையை அறிவித்ததை நாம் ஆய்வுசெய்த போது, இந்த உரையாடலைப்பற்றி பார்த்தோம். இந்த உரையாலில், அவர் தாம் மேசியா என்பதை மிகத் தெளிவாக வலியுறுத்தினார். ஆனால் இப்போது வேறுபட்ட ஒன்றை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். இந்தப் பெண்ணின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையைப் பற்றி நாம் அறிந்துகொள்ள விரும்புகிறோம். ஆனால் இவையனைத்தும், இவளுடைய காரியத்தில், ஒரே வார்த்தையில் விவரிக்கப்படுகிறது - அந்த வார்த்தை ''தாகம்'' என்பதாகும். தாகம் என்றால் என்ன என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். யோவானின் சுவிசேஷத்தில், மனிதர்களின் அடிப்படைத் தேவைகளை இயேசு எடுத்துக்காட்டுகிறார்.

இந்தப் பெண் தாகமாக இருந்தாள், எனவே, இயேசு அவளுடைய தாகத்தைக் கருத்தில் கொண்டு, ''இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிற வனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நிரூற்றா யிருக்கும்'' என்று அவளிடம் கூறினார் (யோவான் 4:13,14). இந்த வசனங்களில், தாகமுள்ள ஒரு மனிதன் அவரிடம் காணக்கூடிய தீர்வை இயேசு விவரிக்கிறார்.

அப்பெண்ணுடனான அவருடைய உரையாடலின் துவக்கத்தில், அவரிடம் தண்ணீர் மொண்டு கொள்ளும் பாத்திரம் இல்லாததையும் கிணறு ஆழமாக இருக்கிறதையும் குறித்து அவள் வியக்கிறாள். தண்ணீர் மொண்டெடுக்கும் பாத்திரம் அவளுடைய தாகத்திற்கான அடையாள மாகும். அவளுக்கு ஐந்து புருஷர் இருந்தும், இப்போது அவளோடு இருப்பவன் அவளுடைய புருஷனல்ல என்ற உண்மை, அவளுடைய தாகம் தண்ணீருக்கான ஒரு தாகத்தைக் காட்டிலும் ஆழமானது என்பதை எடுத்துரைக்கிறது. இந்த உரையாடலின் விளைவாகவும், இயேசு இந்தப் பெண்ணிற்கு அதிகமாக மதிப்பளித்த முறையின் விளைவாகவும், 28,29

வசனங்களில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்! ‘‘அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்... என்றாள்’’. அந்த வசனம் சுவிசேஷங்களிலுள்ள வசனங்களில் மிக அழகான வசனமாகும், ஏனென்றால் கிறிஸ்துவைச் சந்தித்து, அவரிடமிருந்து ஜீவத்தண்ணீரைப் பருகி, தாகம் தீர்ந்த ஒரு நபரைப் பற்றி அது விவரிக்கிறது. என்ன அழகான ஒரு சம்பவம்!

ஊற்றுகளும் ஆறுகளும்

இந்தத் தாகமுள்ள பெண் ஜீவத்தண்ணீரை ஒருமுறை பருகி விட்டால், அந்தத் தண்ணீர் அவளுக்குள் ஒரு நீரூற்றாக மாறிவிடும் என்றும், மற்றவர்கள் அந்த நீரூற்றுக்கு வந்து தண்ணீர் பருகுவார்கள் என்றும் இயேசு அவளிடம் கூறினார். இது உண்மையில் நடந்தது - அவள் தன்னுடைய தண்ணீர் குடத்தை வைத்துவிட்டு, சமாரியாவிலிருந்த மனிதர்களிடம் ஓடி, அவர்களை இயேசுவினிடமும், ஜீவதண்ணீரிடமும் வழிநடத்தினாள்.

யோவானுடைய சுவிசேஷத்தின் ஏழாம் அதிகாரத்தில், இயேசு மீண்டுமாக தாகத்தைப் பற்றி கூறுகிறார். இந்த அதிகாரத்தில் இயேசு குறிப்பாக இவ்வாறு கூறினார்: ‘‘ஒருவன் தாகமுள்ளவனாக இருந்தால், என்னிடத்தில் வந்து, பானம்பண்ணட்டும், ஜீவத் தண்ணீராக இருக்கிற என்னிலிருந்து அவன் பருகும்போது, அவனுக்குள்ளிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும். அவன் என்னிலிருந்து தண்ணீரைக் குடிக்கும்போது, அவனுடைய தாகத்தை என்றென்றுமாக தீர்க்கும் ஜீவத்தண்ணீர் நான் என்பதையும், இந்த ஜீவத்தண்ணீரின் பானம் அவனுடைய தாகத்தைத் தீர்த்தபின்பு, அவனுடைய வாழ்க்கையில் குறுக்கிடுபவர்களின் தாகங்களையும் தீர்க்கும் என்பதையும் அறிந்து கொள்வான்’’.

இயேசுவினுடைய இந்த உரையாடல்கள் அனைத்திலும், அவர் மனந்திரும்புதலின் கருத்தோடு மக்களைச் சந்தித்தார்; மனந்திரும்புதலின் கருத்து என்பதன் பொருள் உங்களுடைய மதிப்பீட்டு அமைப்பைப்பற்றி ‘‘மீண்டுமாக சிந்தியுங்கள்’’ என்பதாகும். உங்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றி மீண்டுமாக சிந்தித்தபின், நீங்கள் பின்னுக்குத் திரும்பி எதிரான திசையில் செல்லவில்லையென்றால், மக்கள் இந்த ஜீவத் தண்ணீரைப் பெற முடியாது. இந்தக் காரியத்தைப் புரிந்து கொண்ட

அந்தப் பெண் மனந்திரும்புகிறாள்; இந்தச் சம்பவத்தில் அதை வாசிப்பது மிகவும் அருமையாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

ஆனால் இந்தச் சம்பவத்தில் நாம் காணவிரும்பும் காரியம், இந்தத் தாகமுள்ள எளிமையான, பாவமுள்ள, சமாரியப் பெண்ணிடம் இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையாகும். இந்தப் பெண்ணின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் காணும்போது, அவளைப் போன்ற மக்களிடம் அவர் வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் காணமுடியும். நம்முடைய பாடத்தில், இழந்து போன, துன்பப்படும் மக்களின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையைப்பற்றி நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இந்த உரையாடல் அதற்கான ஒரு சிறந்த உதாரணமல்லவா? சமாரியாவின் வழியாகச் சென்ற இயேசு இந்த ஒரு பெண்ணிடம் நேரத்தை செலவிடும் அளவிற்கு அவள்மீது மிகப் பெரிய மதிப்பை வைத்தார், ஏனென்றால் அவர் அவள்மீது கரிசனை கொண்டார். ‘‘தேவன் உலகத்தை அவ்வளவாக நேசித்ததினால், பிதாவின் அன்பை வெளிப்படுத்துவதற்காக இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்’’ என்ற உண்மையை இயேசு இச்சம்பவத்தின்மூலம் வெளிப்படுத்தினார்.

மீண்டுமாக, நாம் ஒரு சவாலைச் சந்திக்க வேண்டும். இந்த பாவமுள்ள சமாரியப் பெண்ணைப் போன்ற ஒரு பெண்ணை நீங்கள் சந்திக்கும்போது, இயேசுவைப் போல அவளிடம் முழு ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் நீங்கள் காட்டுவீர்களா? இழந்து போன மக்களின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா?

அத்தியாயம் – 13

தேவனுடைய போதனை

தேவனுடைய வார்த்தை விசுவாசத்திற்கும், அதன் பயன்பாட்டிற்கு மான இறுதியான அதிகாரமில்லை என்று நம்புவது இன்றைக்கு ஆவிக்குரிய அறிவாகக் கருதப்படுகிறது. விசுவாசத்திற்கும், அதன் பயன்பாட்டிற்குமான இறுதியான அதிகாரம், ஒன்று மனிதனாக அல்லது தேவனாக இருக்கக்கூடும் என்று இயேசு எடுத்துக்காட்டினார்; அது தேவனாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். கிறிஸ்துவினுடைய மதிப்புமிக்க தன்மைகளைப் பற்றிய இந்தப் பாடத்தில், தம்முடைய போதனை தேவனுடைய போதனையாக இருக்கிறது என்று இயேசு கூறியபோது, அவர் தம்முடைய போதனையின்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்:

''அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடைய தாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்'' (யோவான் 7:15-17).

அவர் இங்கு கூறுவது என்னவென்றால், ''நான் மற்றொரு ரபி மட்டுமல்ல, என்னுடைய போதனை தேவனுடைய போதனையா யிருக்கிறது.'' இயேசு கிறிஸ்துவின் போதனை தேவனுடைய வார்த்தை யாயிருக்கிறது என்பதை நீங்கள் எவ்வாறு அறிவீர்கள்? வேதவாக்கியங்கள் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது, அவை அவற்றை எழுதினவர்

களுடைய வார்த்தைகள் மட்டுமல்ல என்ற உண்மை இன்றைக்குக் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. கிறிஸ்துவைப் பின்பற்று கிறோம் என்று சொல்லிக்கொள்ளும் பல மக்கள் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நம்பவில்லை. யோவானுடைய சுவிசேஷத்தின் 7-ம் அதிகாரத்தில், இயேசு நமக்கு ஒரு நேரடியான சவாலை அளிக்கிறார். அவர் தம்முடைய போதனை தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது என்றும், அது தேவனுடைய போதனையாக இருக்கிறது என்றும் கூறுகிறார்.

கிறிஸ்துவின் இந்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் எவ்வாறு அறிக்கையிடுவீர்கள்? இயேசுவினுடைய போதனை தேவனுடைய போதனையே என்பதை நீங்கள் எவ்வாறு நிரூபிப்பீர்கள்? அவருடைய போதனை ஏவப்பட்ட தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. அதை உங்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்துங்கள். இயேசு கூறுகிறபடி, நாம் அதைச் செய்யும்போது, அவருடைய போதனை தேவனுடைய போதனையாயிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்வோம். இது அறிவுப்பூர்வமான அணுகுமுறைக்கு எதிரிடையானது. ''நான் அதை அறிந்து கொண்ட பின்பு அதைச் செய்வேன்'' என்று அறிவுப்பூர்வமான கண்ணோட்டம் அடிக்கடி கூறுகிறது. ஆனால் இங்கு இயேசு இவ்வாறு கூறுகிறார். ''இல்லை, இல்லை, அது அவ்வாறு செயல்படுவதில்லை. இல்லை, அறிவுபூர்வமாக வலியுறுத்துதல் பின்தொடரும். நீ அதைச் செய்யும்போது, அதை அறிந்து கொள்வாய்.''

இதற்கு உதாரணமாக, இயேசுவினுடைய போதனைகளில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்! ''வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' (அப்போஸ்தலர் 20:35). அந்த சத்தியத்தை உங்களுடைய திருமணத்தில், உங்களுடைய வாழ்க்கைத்துணையிடம், உங்களுடைய பிள்ளைகளிடம், பயன்படுத்துங்கள். நீங்கள் அந்தப் போதனையை உங்களுடைய திருமணத்தில் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தத் திருமண வாழ்க்கையை நீங்கள் வாழ்வதற்குத் துவங்குகிறீர்கள், நீங்கள் பெற்றுக் கொள்ளும் காரியங் களுக்காக அல்ல, ஆனால் நீங்கள் கொடுக்கக்கூடியவைகளுக்காக, நீங்கள் அதைச் செய்யும்போது, இந்த ''ஒன்பதாம் திருமொழியை'' உண்மையில் பயன்படுத்தும்போது, இந்தப் போதனையின் பயன்பாடு உங்களுடைய திருமணத்தில் ஒரு புரட்சியைக் கொண்டுவரும். இந்தப் போதனை உங்களுடைய பிள்ளைகளுடனான, பெற்றோருடனான அல்லது

உங்களுடன் வேலை செய்பவர்களுடனான உறவுமுறைகளையும் புரட்சிகரமாக மாற்றும். அந்த ஒரு சத்தியம் உங்களுடைய உறவுமுறைகள் அனைத்தையும் புரட்சிகரமாக மாற்றும்.

இயேசு இங்கு கூறுவது என்னவென்றால், ''என்னுடைய போதனை தேவனுடைய போதனையாயிருக்கிறது என்பதை நீங்கள் நிரூபிக்க விரும்பினால், அதைச் செய்யுங்கள். அதை நடைமுறையில் செயல் படுத்துங்கள். அதைப் பயன்படுத்துங்கள். நீங்கள் அதை நடைமுறையில் செயல்படுத்தும்போது, என்னுடைய போதனை உங்களுடைய வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் முறையைக் கவனியுங்கள், என்னுடைய போதனை மற்றொரு ரபியின் போதனையாக மட்டுமல்லாமல், தேவனுடைய போதனையாயிருக்கிறது என்பதற்கு அது சான்றளிக்கும்''.

இயேசு தம்முடைய போதனையின்மீது வைத்த மதிப்புமிக்கத் தன்மையை நீங்கள் அறிக்கையிடுவதற்கு மனமுடையவர்களாக இருக்கிறீர்களா? இயேசுவினுடைய போதனையை உண்மையில் உங்களுடைய வாழ்க்கையில் பயன்படுத்துவதன்மூலம் அவர் தம்முடைய போதனையின் மீது வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடுவதற்கு நீங்கள் மனமுடையவர்களாக இருக்கிறீர்களா? இயேசு கிறிஸ்துவினுடைய போதனையை உங்களுடைய வாழ்க்கையின் உண்மையான சூழ்நிலைகளில் பயன்படுத்துவீர்களா? இயேசு கிறிஸ்துவின் போதனையை உங்களுடைய உறவு முறைகளில் பயன்படுத்தி, பின்பு அவருடைய போதனை உண்மையாகவே தேவனுடைய போதனையாக இருக்கிறது என்பதை நிரூபிப்பீர்களா?

அத்தியாயம் – 14

மக்களின் முன்னுரிமைகள்

நாம் இயேசு கிறிஸ்துவினுடைய மதிப்பீட்டு அமைப்பை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அவர் தம்முடைய மதிப்புமிக்க தன்மைகளைச் சுட்டிக்காட்டுவதை நாம் கவனித்து, சுவிசேஷங்களின் வழியாக அவரைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். இயேசு சில வேளைகளில் தம்முடைய மதிப்புமிக்க தன்மைகளை தம்முடைய முன்னுரிமைகளின் மூலம் எடுத்துக்காட்டினார். அவர் செயல்படுத்தின மக்கள் முன்னுரிமைகளை எடுத்துக்காட்டும் ஓர் ஆர்வமூட்டும் சம்பவம் லூக்காவின் சுவிசேஷத்தில் இடம் பெற்றுள்ளது:

''அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால், தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் போகையில் திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள்.

''அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ, அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று.

''அப்பொழுது இயேசு: என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்னபோது, பேதுருவும் அவனுடனேகூட இருந்தவர்களும்: ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார்

என்று எப்படி கேட்கிறீர் என்றார்கள். அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்.

''அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லையென்று கண்டு, நடுங்கிவந்து, அவர் முன்பாக விழுந்து தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங் களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள். அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத் தோடே போ என்றார்'' (லூக்கா 8:41-48).

இந்த அழகான சம்பவத்தில், இயேசு இழந்துபோன, துன்பப்படும் மக்களின்மீது வைத்த மிக உயர்வான மதிப்புமிக்க தன்மையை மீண்டுமாக கவனியுங்கள். ஆனால் இங்கு ஒரு முரண்பாடு காணப்படுகிறது. இயேசு துன்பப்படும் இரண்டு நபர்களைச் சந்திக்கிறார்: தன்னுடைய ஒரே மகள் மரித்துக் கொண்டிருக்கும் நிலையில் அவரை நாடிவந்த ஒரு தகப்பன்; பன்னிரண்டு வருடகாலமாக பெரும்பாடுள்ளவளாயிருந்த ஒரு பெண், இயேசுவும்கூட, தம்முடைய சரீரத்தில், ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருக்கமுடியாது. ஒவ்வொரு போதகரும் அல்லது மருத்து வரும் மக்கள் முன்னுரிமைகளின் நெருக்கடியை அறிந்திருக்கிறார்கள். உங்களுக்கு நேரமில்லாத சூழ்நிலையில், தேவையுள்ள, துன்பப்படும் மக்கள் பலர் உங்களைத் தேடிவரும்போது, மக்கள் முன்னுரிமைகள் என்று வகைப்படுத்தக் கூடிய தீர்மானங்களை நீங்கள் எப்படி எடுப்பீர்கள்?

இந்தச் சம்பவத்தில், இயேசு தம்முடைய முன்னுரிமைகளை அறிந்திருந்தார். அவர் முதலாவதாக அந்தப் பெண்ணிற்கு உதவி செய்து, பின்பு அந்தத் தகப்பனுக்கு உதவினார். நாம் இந்த இரண்டு மக்களையும் சந்தித்திருந்தால், நம்மில் பலர் அந்தத் தகப்பனுக்கு முன்னுரிமையளித்து, அந்தப் பெண்ணை இரண்டாம் இடத்தில் வைத்திருப்போம். அவன் ஜெப ஆலயத்தலைவன்; அவள் ''ஒன்றுமில்லாதவள்''. உண்மையில், அவள் ஒதுக்கப்பட்டவள். மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின்படி, அவள் எவரையும் தொடுவதற்கு தடைசெய்யப்பட்டிருந்தாள்; அவள் விலகியிருந்து, மக்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருக்க வேண்டும் (லேவியராகமம் 15:19-30). அவள் உண்மையில் ஒரு ''தீண்டத் தகாதவள்.'' இயேசு முதலாவதாக அவளுக்கு உதவிசெய்து, பின்பு அந்தத் தகப்பனுக்கு உதவிசெய்யத் தீர்மானித்தது சற்று விந்தையாக உள்ளது.

இயேசு ஏன் அவளுக்கு முதலாவதாக உதவிசெய்தார்? இந்தப் பெண்ணிற்கு உதவி செய்வதற்குள் அந்தத் தகப்பனின் மகள் இறந்துவிடக்கூடும் என்பதை இயேசு அறிந்திருந்தும் அவர் ஏன் தகப்பனுக்கு உதவிசெய்வதில் தாமதித்தார்? இக்கேள்விக்கான ஒரு பதில், இந்தத் தகப்பன் தன்னுடைய சிறிய மகளுடன் 12 வருடகாலங்களாக மகிழ்ச்சியை அனுபவித்திருந்தான்; இந்தப் பெண்ணோ ஒதுக்கப்பட்ட வளாக, நோயாளியாக, மக்களுடன் தொடர்பு கொள்வதற்குத் தடைசெய்ய ப்பட்டவளாக 12 வருடங்களாக துக்கத்தை அனுபவித்திருந்தாள்.

இந்தப் பெண் மிகப்பெரிய விசுவாசமுடையவளாக இருந்தாள். அவள் ''நான் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொட்டால் சுகமடைவேன்'' என்று நம்பி, அது தடைசெய்யப்பட்டதாக இருந்தாலும் அதைச் செய்வதில் விசுவாசமுடையளாக இருந்தாள். அவள் அவரிடம் நெருங்கிச் சென்று, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டபோது, ஒரு மிகப்பெரிய விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். இயேசு அவளிடமிருந்து இன்னும் அதிகமான விசுவாசத்தை எதிர்பார்த்தார். அவர் அவளைக் கூட்டத்திற்குள்ளிருந்து வெளியே வரச்செய்து ''என்னைத் தொட்டது யார்?'' என்ற தமது கேள்வியுடன், அவள் தன்னுடைய நிலமையை அறிக்கையிடும்படிச் செய்தார். அவர் தம்மை ஆவிக்குரிய வகையில் ஒருவர் தொட்டதாகக் குறிப்பிட்டார். ஒருவன் இரகசிய விசுவாசியாக இருக்கமுடியாது என்று பல வழிகளில் வேதவாக்கியங்கள் உரைக்கின்றன.

செயல்படுத்துதல்

இயேசு அறிவித்த மதிப்புமிக்க தன்மையின் அழகான, தனிப்பட்ட பயன்பாடு என்னவென்றால், உயிர்த்தெழுந்த, ஜீவிக்கிற கிறிஸ்துவைச் சென்றடைந்து, அவரைத் தொடுவதற்கான விசுவாசம் உங்களுக்குள்ளிருந்தால், இன்றைக்கு அவர் உங்களுக்கு மதிப்பளிக்கிறார். நீங்கள் துன்பப்படுகிறவர்களாக, சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டவர்களாக இருந்தாலும்கூட, சமயப் பிரகாரமான, கலாச்சாரப் பிரகாரமான உயர்நிலைகளில் உள்ள மக்களைக் காட்டிலும் அவர் உங்களுக்கு அதிக மதிப்பளிக்கிறார். நீங்கள் சிறையில் இருக்கலாம் அல்லது எய்ட்ஸினால் மரித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இயேசு உங்களுக்கு மதிப்பளிக்கிறார் என்பதை இந்த அழகான சம்பவம் கூறுகிறது. வாழ்க்கையில் துன்பத்தை அனுபவித்து, அதிலிருந்து இயேசுவால்

தங்களைச் சுகமாக்கமுடியும் என்று விசுவாசிக்கிறவர்களுக்காக அவர் வந்தார். அந்த மதிப்புமிக்கத் தன்மையை அறிக்கையிடுவதற்கான விசுவாசம் - உங்களுக்கு துன்பம் எதுவாக இருந்தாலும் அதைச் சுக மாக்கும்படி அவரிடம் கேட்பதற்கான விசுவாசம் - உங்களிடம் உண்டா? இந்தப் பெண்ணிற்காகவும், அவளைப் போன்ற மக்களுக்காகவும் இயேசு அறிவித்த மதிப்புமிக்க தன்மையை, இன்றைக்கு அவரைச் சென்றடைந்து, அவரைத் தொடுவதன்மூலம் அறிக்கையிடுங்கள்.

விசுவாசியே, துன்பப்படும் ஒதுக்கப்பட்ட மக்களுக்காக இயேசு அறிவித்த மதிப்புமிக்க தன்மையை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? அவர் உங்களைப் பூரணப்படுத்தியிருந்தால், அவர் உங்கள்மூலமாக உலகத்தில் துன்பப்படும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு அவரை அனுமதிப்பீர்களா? இன்றைக்கு நோயுற்றவர்களுக்காகவும், ஒதுக்கப் பட்டவர்களுக்காகவும் அறிவிக்கப்பட்ட கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மை வெளிப்படுத்தப்படும் ஒரு வாய்க்காலாக நீங்கள் இருப்பீர்களா?

அத்தியாயம் – 15

ஜீவனுள்ள வார்த்தைகள்

நாம் இயேசு கிறிஸ்துவின் மதிப்புமிக்கத் தன்மைகளைக் கற்றுக் கொண்டிருக்கிறோம். அவர் தம்முடைய பார்வையில் முக்கியமான காரியங்களைச் சுட்டிக்காட்டுவதை நாம் காணும்போது, ''நம்முடைய சொந்த வாழ்க்கையின் அனுபவத்தில் கிறிஸ்துவின் மதிப்புமிக்க தன்மைகளை நாம் பெற்றிருக்கிறோமா?'' என்ற கேள்வி நமக்கு ஒரு சவாலை அளிக்கிறது. இந்தப் பாடத்தில், இயேசுவினுடைய போதனை யின் மதிப்புமிக்க தன்மையைக் குறித்து சில ஆர்வமூட்டும் காரியங்களை எடுத்துரைக்கும் சில வசனங்களை நாம் பார்க்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

முதலாவதாக, இயேசு தம்முடைய போதனையைப் பற்றி கூறிய இந்த ஆழமான கருத்தைக் கவனியுங்கள்: ''ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது'' (யோவான் 6:63). வேதாகமத்தில் ''மாம்சம்'' என்ற வார்த்தையின் பொருள், ''தேவனால் உதவிசெய்யப்படாத மனித சுபாவம்'' அல்லது நாம் சில சமயங்களில் கூறுவதுபோல, ''நம்முடைய மனிதத்தன்மை'' என்பதாகும். நம்முடைய மாம்சம் ஒன்றுக்கும் உதவாது என்று இயேசு கூறியதன் பொருள் என்ன? அவர் அப்போஸ்தலர்களிடம், ''என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது'' என்று கூறியபோது, அவர் உணர்த்திய அதே காரியத்தை இப்போது கூறுகிறார் (யோவான் 15:5). ஆவியில்லாமல், நம்முடைய மனித சுபாவம் தேவனால் உதவிசெய்யப்படாததாகவும், ஒன்றுக்கும் உதவாததாகவும் இருக்கிறது. அவருடைய வார்த்தைகள் ஆவியா

யிருக்கின்றன; ஒன்றுக்கும் உதவாத நம்முடைய மாம்சத்தை மேற்கொள்ளும் ஜீவனை அவருடைய வார்த்தைகள் நமக்கு அளிக்கின்றன.

அவர் தம்முடைய போதனையைப்பற்றி இன்னும் அதிகமான காரியங்களைக் கூறுகிறார்: ''நான் உங்களிடம் கூறும் வார்த்தைகள் என்னுடையவைகளல்ல, மாறாக எனக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் பிதாவானவர் (நான் பேசும்போது) தம்முடைய கிரியையைச் செய்கிறார்.'' அவர் பின்வரும் வார்த்தைகளைக் கூறுவதன்மூலம் தம்முடைய போதனையின்மீது ஒரு மிகப்பெரிய மதிப்பை வைக்கிறார்: ''நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. நான் பேசும்போது என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்'' (யோவான் 14:10).

அவர் இவ்வாறு கூறுவதாக நான் நம்புகிறேன்: ''நீங்கள் என்னுடைய வார்த்தையைக் கேட்டு, அதற்கு சரியாகச் செவிகொடுக்கும்போது, ஆவிக்குரிய காரியம் ஆவிக்குரிய வாழ்க்கையை உங்களுக்குள் உருவாக்குகிறது.'' விசுவாசம் கேள்வியினாலும், தேவனுடைய வார்த்தைக்கு சரியான முறையில் செவிகொடுப்பதினாலும் வருகிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கூறியபோது அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கக்கூடும் (ரோமர் 10:17). இயேசு கூறிய இந்தக் காரியம் அவருடைய போதனையின் மீது ஒரு மிகப்பெரிய மதிப்பை வைக்கிறது.

இயேசு கூறிய இன்னும் ஒரு காரியம் அவருடைய போதனையின் மீது மிகப்பெரிய மதிப்பை வைத்ததைக் கவனியுங்கள்: ''நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்'' (யோவான் 15:7,10). இந்த வசனத்தின்மூலம் நாம் விரும்புகிற அனைத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுபோலத் தோன்றினாலும், இந்த வாக்குத்தத்தத்தை மிகக் கவனமாக ஆராய்ந்துபார்க்கும்போது, இயேசு தம்முடைய போதனையின்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையை நம்மால் புரிந்துகொள்ளமுடியும். அவருடைய போதனை உங்களுடைய சித்தத்திற்கும் சிந்தனைகளுக்கும், தேவனுடைய சித்தத்திற்கும் சிந்தனைகளுக்குமிடையே ஓர் இணைப்பை உண்டுபண்ணும் என்று அவர் கூறுகிறார். அவ்வாறு நடக்கும்போது, உங்களுடைய வாழ்க்கையில் ஆச்சரியமான அற்புதங்கள் நிகழும்.

தீர்க்கதரிசியாகிய ஏசாயா, பிரசங்கத்தைப்பற்றிய தன்னுடைய தத்துவத்தை நம்முடன் பகிர்ந்துகொள்கிறார். அவர் இவ்வாறு கூறுகிறார்: ''நான் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிறேன், ஏனென்றால் தேவனுடைய சிந்தனைகளும் வழிகளும் மனிதனுடைய சிந்தனைகளாகவும், வழிகளாகவும் இருப்பதில்லை. பரலோகத்திற்கும் பூமிக்குமிடையே தூரம் இருப்பதுபோல, தேவன் சிந்திப்பதற்கும் செயல்படுவதற்கும், மனிதன் சிந்திப்பதற்கும் செயல்படுவதற்கும் அதிகமான வித்தியாசம் உண்டு. எனவே, நான் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிறேன்; தேவனுடைய வார்த்தை, மனிதனுடைய சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும், தேவனுடைய சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஓர் இணைப்பைக் கொண்டுவருகிறது. மனிதனுடைய சிந்தனை, சித்தம் மற்றும் வழிகள், தேவனுடைய சிந்தனை, சித்தம் மற்றும் வழிகளுடன் இணைந்துசெல்லும்போது, ஆச்சரியமான, அற்புதமான காரியங்கள் நிகழும். எனவேதான் நான் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிறேன். இது பிரசங்கத்தைப் பற்றிய என்னுடைய தத்துவமாகும்'' (ஏசாயா 55:8-11 என்னுடைய சொந்த வார்த்தைகளில்).

செயல்முறையளவில், இயேசு இதே சத்தியத்தைப் போதிக்கிறார். அவர் குறிப்பாக இவ்வாறு போதித்தார்: ''என் வார்த்தைகள் உங்களுடைய இருதயங்களில் வாழ்ந்தால், பின்பு தேவனுடைய சித்தத்திற்கும், உங்களுடைய சித்தத்திற்கும் ஒரு இணைப்பு உண்டாகும். தேவனுடைய சிந்தனைகள் உங்களுடைய சிந்தனைகளாக மாறும், தேவனுடைய வழிகள் உங்களுடைய வழிகளாக மாறும். பின்பு, நீங்கள் ஜெபிக்கும்போது, நீங்கள் விரும்புகிற எதையும் நீங்கள் கேட்கலாம், அதை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள், ஏனென்றால் நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி கேட்டீர்கள்''.

தேவனுடைய சிந்தனைகள் உங்களுடைய சிந்தனைகளாக மாறி, உங்களுடைய சித்தம் தேவனுடைய சித்தத்துடன் இணையும்படியாக நீங்கள் இயேசுவினுடைய வார்த்தைகளிடம் வந்து, அவருடைய வார்த்தைகள் உண்மையாகவே உங்களில் வாழுவதற்கு அனுமதிப்பதின் மூலம், அவருடைய போதனையின்மீது அவர் வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடுவீர்களா? நீங்கள் கிறிஸ்துவின் இந்த மதிப்புமிக்கத் தன்மையை அறிக்கையிட்டால், அவருடைய வார்த்தைகள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது என்ற சத்தியத்தைக் கண்டறிவீர்கள்.

அத்தியாயம் – 16

ஏழைகள்

கிறிஸ்துவினுடைய மதிப்புமிக்க தன்மைகளைப்பற்றிய மற்றொரு பாடத்திற்கு உங்களை வரவேற்கிறேன். இந்தப் பாடத்தில், இயேசு கிறிஸ்து ஏழை மக்களின்மீது - உங்களையும் என்னையும் போன்ற மக்களின்மீது - வைத்த மதிப்புமிக்க தன்மையைக் கருத்தில் கொள்ள விரும்புகிறேன்: ''கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொருங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்'' (லூக்கா 4:18-19).

இந்த வேதவாக்கியம் உண்மையில் ஏசாயா எழுதிய தீர்க்கதரிசன புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மேற்கோளாகும்; இந்த வேத வாக்கியத்தை இயேசு தம்முடைய ஊழியத்திற்கான கொள்கை விளக்க அறிவிப்பாக, நாசரேத்தின் ஒரு ஜெப ஆலயத்தில் வாசித்தார். அவர் தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தின் ஜெபஆலயத்திற்குச் சென்று, ஏசாயாவின் புஸ்தகச்சுருளைக் கேட்டார். அவர் அதை ஏறக்குறைய முழுவதுமாக விரித்து 61-ம் அதிகாரத்தை எடுத்து, அந்த அதிகாரத்தின் முதல் வசனங்களை வாசித்தார். பின்பு அவர் குறிப்பாக இவ்வாறு கூறினார்: ''இது என்னுடைய கொள்கை விளக்க அறிவிப்பு. நானே அவர், இதைச் செய்யும்படியே நான் உலகத்திற்கு அனுப்பப்பட்டேன்.''

இயேசு தம்மீது வைத்த மதிப்பைக் காட்டிலும், அவர் இரட்சிக்கும்படி உலகத்திற்கு வந்த உங்களையும் என்னையும் போன்ற மக்களின்மீது அவர் வைத்த மதிப்பு அதிகம் என்ற உண்மை அவருடைய செயல்களுக்கு சிறப்பளிக்கிறது. அவர் அவர்களை ''ஏழைகள்'' என்று அழைக்கிறார்; இந்த ஏழை மக்களுக்கு சுவிஷேத்தைப் பிரசங்கிப்பதற்காக அவர் இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டார் என்பது அவருடைய பணித்திட்ட வாசகமாக இருந்தது. இந்த ஏழை மக்கள் யார்?

குருடர்கள், கட்டுண்டவர்கள், நொறுங்குண்டவர்கள்

இந்த வேதபகுதியை நீங்கள் லூக்காவில் அல்லது ஏசாயாவில் வாசித்தால், ''ஏழைகள்'' என்று அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்பதை அவர் தெளிவாகக் கூறுவதைக் காண்பீர்கள். அவர் குருடர்களாயிருக்கிற மக்களை, மேய்ப்பனில்லாத ஆடுகளைக் குறிப்பிடுகிறார். நீங்கள் எப்போதாவது குழப்பமடைந்திருக்கிறீர்களா? நீங்கள் வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் போல உணருகிறீர்களா? நீங்கள் எதை நம்புகிறீர்கள் என்பதில் உறுதியற்றவர்களாக இருப்பதன் காரணமாக, என்ன செய்வது என்று அறியாமல் இருக்கிறீர்களா? அப்படியென்றால், நீங்கள் ஆறுதலடைய வேண்டும். இயேசு உங்களைப் போன்ற மக்களின்மீது மிகப்பெரிய மதிப்பை வைத்தார். அவர்தாமே இவ்வுலகத்திற்கு உங்களைப் போன்ற மக்களுக்காக வந்ததாகக் கூறுகிறார். அவர் தம்முடைய வாயைத் திறந்து, அவர்களுக்குப் போதித்தார்.

இயேசு உடைக்கப்பட்டு, காயமடைந்திருக்கும் ஏழைகளுக்கு நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்காக தாம் வந்ததாகக் கூறினார். வாழ்க்கை கடினமானது. இயேசு அதை உண்மையென்று உறுதிப்படுத்தினார். வாழ்க்கையின் அழுத்தங்களினால் சில மக்கள் தடுமாறுகிறார்கள், தள்ளாடுகிறார்கள், ஆனால் சில மக்கள் நொறுங்கிவிடுகிறார்கள். இயேசு காயப்பட்டவர்கள் அல்லது மனமுடைந்தவர்கள் என்று அழைத்த மக்களின்மீது மிகப்பெரிய மதிப்புமிக்க தன்மையை வைத்தார். அவர் குருடருக்குப் பார்வையைக் கொடுக்கவும், உடைக்கப்பட்டு, காயமடைந்தவர்களுக்கு சுகத்தைக் கொடுக்கவும் வந்தார்.

நீங்கள் விடுதலையுடன் இருக்கிறீர்களா? நீங்கள் விரும்புகிறதைச் செய்கிறீர்களா அல்லது நீங்கள் செய்யவேண்டியதைச் செய்கிறீர்களா? நீங்கள் கட்டாயங்களினாலும், அழுத்தங்களினாலும் கட்டுப்படுத்தப்படுகிறீர்களா? நீங்கள் சிறைப்பட்டவர்களா? அப்படியென்றால், இயேசு

வினுடைய இந்த உயர்வான போதனை உங்கள்மீது ஒரு மிகப்பெரிய மதிப்பை வைக்கிறது. உங்களைப் போன்ற மக்களுக்காக இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் உங்களை ஆவிக்குரிய ஏழைகளென்று அழைக்கிறார். ஆனால் விடுதலையற்ற உங்களையும் என்னையும் போன்ற ஏழை மக்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்காக அவர் வந்தார்.

நீங்கள் ஆவிக்குரிய குருடரா? நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக கட்டுண்டவரா? நீங்கள் வாழ்க்கையின் கடினங்களினால் உடைக்கப் பட்டு, காயமடைந்திருக்கிறீர்களா? அப்படியென்றால், இயேசு உங்கள்மீது மிகப்பெரிய மதிப்பை வைத்திருக்கிறார். அவர் உங்களுக்காக வந்ததாகக் கூறுகிறார். அவர் இன்றைக்கு இவ்வுலகத்தில் இருப்பதற்கான காரணம் நீங்களே என்று இங்கு அவர் கூறுகிறார். நீங்கள் உங்களுடைய குருட்டுத்தன்மையிலிருந்து பார்வையைப் பெறும்படியும், உங்களுடைய சிறையிருப்பிலிருந்து விடுதலையைப் பெறும்படியும் உங்களுடைய உடைக்கப்பட்ட தன்மையிலிருந்து சுகத்தைப் பெறும்படியும், இயேசு வினிடம் வந்து, உங்களைப் போன்றவர்கள் மீது அவர் வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடுவதற்கு மனமுடையவர்களாக இருக்கிறீர்களா?

அத்தியாயம் – 17

உங்களுடைய அயலான்

இயேசு கிறிஸ்துவின் மதிப்பீட்டு அமைப்பைப் பற்றிய மற்றொரு பாடத்திற்கு உங்களை வரவேற்கிறேன். இந்தப் பாடத்தில், நம்முடைய அயலான்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை நாம் கருத்தில் கொள்வோம்.

''அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து, அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும் படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார். அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்தில் அன்பு கூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான். அவர் அவனை நோக்கி: நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார். அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: என்க்குப் பிறன் யார் என்று கேட்டான்.''

''இயேசு பிரதியுத்தரமாக, ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரித்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

''பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுய வாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து, நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்.''

''இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவன்: அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்.''

இந்தக் கதையில் வாழ்க்கையைப் பற்றிய அல்லது அயலானைப் பற்றிய மூன்று தத்துவங்கள் இருக்கின்றன. முதலாம் தத்துவம் கள்ளர் களால் வெளிப்படுத்தப்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கையின் தத்துவம் என்னவென்றால், ''என்னுடையவைகள் என்னுடையவைகளாக இருக்கிறது; உன்னுடையவைகளை நான் உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளும்போது அது என்னுடையவைகளாக மாறுகிறது.'' உலகத்தின் பல மக்கள் இந்தத் தத்துவத்தைப் பின்பற்றுகிறார்கள்.

வாழ்க்கையின் இரண்டாம் தத்துவத்தை ஆசாரியனும், லேவியனு மாகிய மதப்பிரகாரமான மக்கள் வெளிப்படுத்துகிறார்கள்; அவர்கள் உதவிசெய்யாமல் கடந்து போனார்கள். அவர்களுடைய வாழ்க்கையின் தத்துவம் என்னவென்றால் ''என்னுடையவைகள் என்னுடையவைகளாக இருக்கிறது. எனக்குப் பிரச்சனைகள் இருக்கிறது: உனக்கும் பிரச்சனைகள் இருக்கிறது, நீ இப்போது பிரச்சனையில் இருக்கிறாய், நீ குழியில் இருக் கிறாய்; சாகும் அளவிற்கு இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது. ஆனால் நான் சபைக்குச் செல்வதற்கு தாமதமாகிக்கொண்டிருக்கிறது. அதனால் உனக்கு உதவி செய்வதில் நான் ஈடுபடவிரும்பவில்லை.''

வாழ்க்கையையும், அயலானையும்பற்றிய மூன்றாம் தத்துவம் இயேசு போதித்த ஒன்றாகும். இந்தத் தத்துவத்தை சமாரியன் வெளிப்படுத்து கிறான். வாழ்க்கையையும், அயலானையும் பற்றிய அவனுடைய தத்துவம் என்னவென்றால், ''உன்னுடைவைகள் உன்னுடையவைகளாயிருக்கிறது; என்னுடையவைகள் உனக்குத் தேவைப்படும் எந்த வேளையிலும் உன்னுடையவைகளாகும்.''

கிறிஸ்துவினுடைய இந்த மதிப்புமிக்க தன்மை உங்களை ஐசுவரியவனாக மாற்றப்போவதில்லை. நீங்கள் வேலை செய்யும் இடத்தில் நடக்கும் விற்பனைப் போட்டியில் ஒருவேளை நீங்கள் வெற்றிபெறப் போவதில்லை. வாழ்க்கையின் இந்தத் தத்துவத்தினால் தொழில்ரீதியான வெற்றியின் ஏணியில் நீங்கள் உச்சிக்குச் சென்று விடப்போவதில்லை. ஆனால் இது இயேசு போதித்த வாழ்க்கையின் தத்துவமாகும். இயேசு கூறிய கதையில் உள்ள காயப்பட்ட மனிதனைப் போன்ற துன்பப்படும் மக்களின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிட்டு, இந்தத் துன்பப்படும் மக்களுக்கான அவருடைய பதிலின் ஒரு பங்காக இருக்க விரும்பும் சீஷர்களை அவர் நாடுகிறார்.

இந்தச் சம்பவத்தில், அந்த நியாயசாஸ்திரி தன்னை நியாயப்படுத்த விரும்பினான், எனவே அவன் ''எனக்குப் பிறன் யார்?'' என்ற ஒரு நுட்பமான கேள்வியை இயேசுவினிடம் கேட்டான். ஒரு யூதனுக்கு அவனுடைய சகயூதன் மட்டுமே அயலானாக இருப்பான். மற்ற அனைவரும் அவனுக்கு எதிரிகள், ''உங்களுடைய அயலானை நேசித்து, உங்களுடைய சத்துருவை வெறுத்துவிடுங்கள்'' என்பதே அவர்களை வழிநடத்திய கொள்கையாக இருந்தது. உண்மையில் அவர்கள் இந்தக் கொள்கையை மோசேயிடமிருந்து பெறவில்லை. இது மோசேயினுடைய நியாயப்பிரமாணத்துடன் அவர்கள் சேர்த்துக் கொண்ட நூற்றுக் கணக்கான சட்டங்களில் ஒன்று. இயேசுவினுடைய இந்தக் கதை, அவர்களுடைய நம்பிக்கைக்கு சவால் விடுகிறது, துன்பம் அவர்களுடைய வாழ்க்கையில் குறுக்கிடும்போது, அந்த நபர் அவர்களுக்கு அயலானாக இருக்கிறான் என்று அவர்களுக்கு அறிவித்தது. ''எனக்குப் பிறன் யார்?'' என்ற கேள்விக்கு இயேசு இந்த முறையில் பதிலளித்தார். அது நம்முடைய அயலானின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையாகும்.

இந்த மிகப்பெரிய உவமையில் அவர் செய்ததெல்லாம், துன்பப் படும் மக்களின் மீது வைத்த மதிப்புமிக்க தன்மையை நாம் அறிக்கை யிடவேண்டும் என்று போதித்தது மட்டுமே. நாம் சுவிசேஷங்களின் வழியாக அவரைப் பின்பற்றும்போது, அவரால் ஒருபோதும் துன்பப்படும் மக்களைக் கடந்து செல்ல முடியாது என்பதைப் பார்க்கிறோம். அவர்

துன்பப்படும் மக்களைப் பார்க்கும்போது, அவர்களைச் சென்றடைந்து, அவர்களிடம் இரக்கம் பாராட்டி, அவர்களுக்குப உதவி செய்கிறார்.

''நல்ல சமாரியனின் உவமை'' என்று நாம் அழைக்கும் இந்த உவமையில், துன்பப்படும் மக்களின்மீது இயேசு வைத்த மதிப்பு மிக்க தன்மையை நாம் அறிக்கையிட்டு, நாம் சந்திக்கும் அனைத்துத் துன்பப் படும் மக்களையும் நம்முடைய அயலாராக நடத்தவேண்டுமென்ற ஒரு சவாலை அவர் நமக்கு அளிக்கிறார்.

அத்தியாயம் – 18

ஒருவரையொருவர் நேசித்தல்

இந்தப் பாடங்களில், மக்களுடனான தம்முடைய உறவு முறைகளில் அன்பின்மீது இயேசு வைத்த மிகப்பெரிய மதிப்பை நாம் பார்த்தோம். அவர் அன்பின்மீது தாம் வைத்த மதிப்புமிக்கத் தன்மையை அறிக்கை யிடும்படி தம்முடைய சீஷர்களையும், குறிப்பாக தம்முடைய அப்போஸ் தலர்களையும் ஊக்குவித்தார். இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்ன தாக, அவர் தம்முடைய கடைசி மணிநேரங்களை அப்போஸ்தலர்களுடன் செலவிட்டார். மேல்வீட்டறையில் அவர் அவர்களுடன் தனிமையில் இருந்தபோது, அவர் ஒரு புதிய கட்டளையைக் கொடுத்தார். அந்தப் புதிய கட்டளை ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கியது. அந்தப் புதிய சமுதாயம் சபையாக மாறியது. இந்தச் சூழலின் அடிப்படையில், ஒவ்வொரு சபையும் ஒரு அன்பின் குடியிருப்பாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர்களில் ஒவ்வொருவரும் அந்த மேல் வீட்டறையில் இயேசுவுடன் இருந்தார்கள், ஏனென்றால் அவர் அவர்களை நேசித்தார், அவர்கள் அவருடைய அன்பிற்கு செவிகொடுத்தார்கள். இயேசு அப்போஸ் தலர்களுடன் செலவிட்ட அந்தக் கடைசி மணிநேரங்களை விவரிக்கும் அதிகாரத்தின் துவக்க வசனம் இவ்வாறு கூறுகிறது ''....தாம் இவ்வுலகத்தி லிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்'' (யோவான் 13:1).

அவர்கள் அவருடன் மேஜையில் அமர்ந்திருக்கும்போது, ஒருவரை யொருவர் பார்த்து, இந்த புதிய கட்டளையை பயன்படுத்தும்படி அவர் கட்டளையிட்டபோது அது அவர்களுக்குள் ஒரு புரட்சியை ஏற்படுத்தி யிருக்கும்: ''நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள்

ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்'' (யோவான் 13:34,35). இந்தப் பாடத்தில், நாம் ஒருவரையொருவர் நேசிப்பதில் இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையைக் கருத்தில் கொள்வோம்.

சிறுபிள்ளைகளே, ஒருவரையொருவர் நேசியுங்கள்

''பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்'' (I யோவான் 4:7,8). இயேசு அந்தப் புதிய கட்டளையைக் கொடுத்தபோது, அதைக் கேட்டுக் கொண்டிருந்த அப்போஸ்தலர்களில் ஒருவனால் இந்த வசனங்கள் எழுதப்பட்டது. அப்போஸ்தலனாகிய யோவான் அன்பின்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை உண்மையாகவே அறிக்கை யிட்டான், ஏனென்றால் அவனுடைய எழுத்துப் படைப்புகளில், ''அன்பு'' என்ற வார்த்தையை மற்ற அனைத்து அப்போஸ்தலர்களும் கூட்டாகப் பயன்படுத்தினதைக் காட்டிலும் அவன் அதிகமாக பயன்படுத்தினான். இயேசுவுக்கு அன்பான சீஷன் என்று தன்னுடைய சுவிசேஷம் முழு வதிலும் தன்னைப் பற்றி அவன் விவரித்தபோது, அவன்மீது அவர் வைத்திருந்த அன்பின் உண்மைத் தன்மையினால் அவன் ஈர்க்கப் பட்டிருந்ததுபோலத் தோன்றுகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தை அவன் இயேசுவுக்கு அர்ப்பணித்தபோது, அதன் துவக்க வசனங்களில் இயேசு ''நம்மிடத்தில் அன்பு கூர்ந்து'' என்று நினைவு கூருகிறான்.

நாம் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டியதற்கான பத்து காரணங்கள்

அப்போஸ்தலனாகிய பவுலை பலர் அன்பின் அப்போஸ்தலன் என்று நினைக்கிறார்கள், ஏனென்றால் வேதாகமத்தின் அன்பின் அதிகாரம் என்று அழைக்கப்படும். கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தை அவன் எழுதி னான். அந்த அதிகாரத்தின் அடிப்படைக் கருத்து உண்மையில் ஆவிக் குரிய வரங்களாகும். வேதாகமத்தின் உண்மையான அன்பின் அதிகாரம், யோவான் எழுதின முதலாம் நிருபத்தின் நான்காம் அதிகாரமாகும் (I யோவான் 4:7-21). அந்த அன்பின் அதிகாரத்தில், நாம் ஏன் ஒருவரை யொருவர் நேசிக்கவேண்டுமென்பதற்கு யோவான் குறைந்தது பத்துக் காரணங்களை அளிக்கிறார். நாம் அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

யோவான் அந்த அதிகாரத்தின் ஏழாம் வசனத்தில், ''ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்

கிறது'' என்று நமக்குக் கூறுகிறார். நாம் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும், ஏனென்றால் தேவனுடன் உறவுகொண்டிருப்பவர்கள் மட்டுமே இந்த அன்பை வெளிப்படுத்திக் கூடிய தகுதியைப் பெற்றிருக்கிறார்கள் என்று அவர் பொருள் படும்படிக் கூறுகிறார். எட்டாம் வசனத்தில், அவர் இரண்டாம் காரணத்தைக் கூறுகிறார்; அன்பு இயேசு கிறிஸ்துவினுடைய சீஷனின் ஆதாரச் சான்று (credential)என்பது யோவான் அளித்த இரண்டாம் காரணமாகும்.

ஒன்பதாம் மற்றும் பத்தாம் வசனங்களில், ''தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.'' இந்த விளக்கத்திற்குப் பிறகு, அவர் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்: ''பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.''

யோவான் எழுதின முதலாம் நிருபத்தின் நான்காம் அதிகாரத்தில் நீங்கள் தொடர்ந்து இந்த வசனங்களை வாசிக்கும் போது, நாம் ஒருவரையொருவர் ஏன் நேசிக்கவேண்டும் என்பதைப் பற்றி இன்னும் கூடுதலான காரணங்களைக் காண முடியும். உதாரணமாக, 16-ம் வசனத்தில் யோவான் தொடர்ந்து கூறுகிறான்: ''தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.'' இயேசு அன்பின்மீது வைத்த மதிப்புமிக்க தன்மையை நாம் அறிக்கையிட்டால், நாம் தேவனுடைய இயல்பிலும், குணத்திலும் நுழைகிறோம் என்று அவன் இங்கு கூறு கிறான். நாம் தேவனுடைய அன்பின் வாய்க்காலாக மாறும்போது, நாம் அவருடைய அன்பில் வாழுகிறோம்; அவருடைய அன்பு நம்மில் வாழு கிறது. நாம் அவருடைய அன்பில் வாழும்போது, நாம் தேவனில் வாழு கிறோம். நாம் தேவனுடன் இந்த உறவு முறையைப் பெற்றிருக்கிறோம் என்பதற்கான சான்று, அவருடைய அன்பு நம்மில் பூரணப்படுவதாகும். மக்கள் நம்மைப் பார்த்து, தேவனுடைய அன்பைக் காணமுடியும்.

அன்பின் அப்போஸ்தலன் எழுதிய இந்த அன்பின் அதிகாரத்தின் ஒரு பகுதியை கவனத்துடனும், ஜெபத்துடனும் வாசிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்வதன்மூலம், நாம் ஒருவரையொருவர் நேசிப்பதன்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையைப் பற்றி நம்முடைய பாடத்தை நான் முடிக்கிறேன். ஒருவரையொருவர் நேசிப்பதன்

மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடும்படி அப்போஸ்தலனாகிய யோவான் அளித்த விளக்கத்தை நீங்கள் தியானிக்கையில், நாம் ஒருவரையொருவர் ஏன் நேசிக்கவேண்டும் என்பதற்கான பத்து காரணங்களை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா என்று பாருங்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் அதைக் கண்டுபிடிக்கும் போது, அவற்றைப் பட்டியலிடுங்கள். பின்பு, ஒவ்வொரு நாளும், நாம் ஒருவரையொருவர் நேசிப்பதன்மீது இயேசு வைத்த மதிப்புமிக்க தன்மையை அறிக்கையிடுங்கள்.

யோவானுடைய அன்பின் அதிகாரத்தின் ஒரு பகுதி

''பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளி களாயிருக்கிறோம்.

''தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத் திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவன் நம்மேல் வைத்தி ருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்: அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்... தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்தில் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக் கிறோம்'' (I யோவான் 4:7-16,21).